# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 65

விலை ரூபாய் 30.00

தீபம்-65 | மாசி – 2020,
ஆரம்பம் 15 மாசி - 2013

திருமறைக்கல்வி நிலையம்,
இல: 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 2054362


**உன் ஒளி விடியல் போல் எழும் (எசாயா 58 : 08)**

## நற்செய்தி மீள்அறிவிப்பு ஆண்டில் நற்செய்தி பறைசாற்றும் பணியில் பொதுநிலையினரை களம் காண அழைக்கும் திருமலை ஆயர்

**நற்செய்தி மீள்அறிவிப்பு ஆண்டை முன்னிட்டு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் வெளியிட்ட மேய்ப்புப் பணி சுற்றுமடல்**



இறை அருளினாலும்
புனித திருத்தூது ஆட்சிப்பீடத்தின் தயவினாலும்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்
கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆகிய நாம்
நம் மறைமாவட்டத்திலுள்ள
சகல அருள்பணியாளர்கள்
துறவற சகோதர சகோதரிகள்
பொதுநிலை நம்பிக்கையாளர்கள் அனைவருக்கும்
இறைவனின் அருளும் ஆசீரும் வேண்டி எழுதும்
2020ம் ஆண்டிற்கான மேய்ப்புப்பணி மடல்

OMNIA OMNIBUS HOMINIBUS

கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,

குழந்தை இயேசுவின் பிறப்புப் பெருவிழா வாழ்த்துக்களையும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் உங்கள் அனைவருக்கும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். புலர்ந்துள்ள புதிய ஆண்டு உங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும் நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிலும் அன்பு, மகிழ்ச்சி, ஒப்புரவு, சுபீட்சத்தைக் கொண்டு வரவேண்டுமென ஆசிக்கிறோம். இறையழைப்பை உணர்ந்து அர்ப்பணிப்போடு பணிசெய்து அதே உத்வேகத்தோடு புதிய ஆண்டிலும் பயணிக்க அழைப்பு விடுக்கின்றோம்.

தொடர்ச்சி 02ம் பக்கத்தில்.......

## மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை ஞாயிறு திருப்பலி நிகழ்வுகள்










திருப்பாலத்துவ சபை ஞாயிறு திருப்பலியானது 19.01.2020 அன்று புனித குவாடலூப்பே அன்னை ஆலயத்தில் மறைமாவட்ட இயக்குனர் அருட்பணி X. I. றஜீவ அவர்களின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. அத்துடன் மறைமாவட்டத்தின் ஏனைய பங்குகளிலும் திருப்பாலத்துவ சபை ஞாயிறு கொண்டாடப்பட்டது. ''புனிதர்களாகிட மறைதூதுவராகிடுவோம்'' எனும் தொனிப்பொருளில் அஞ்ஞாயிறு திருப்பலியை சிறப்பித்த அனைத்து பங்குக் குருக்களுக்கும் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கும் நன்றியோடு கூடிய பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல் : திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள் செயலகம்,
திருகோணமலை மறைமாவட்டம்

## வேதத்தீவில் புனித யோசப்வாஸிற்கு புதிய ஆலயம்




## நன்றிகளும் பாராட்டுக்களும்



கடந்த 2018 மே முதல் 2020 ஜனவரி 11ம் திகதி வரை திருகோணமலை திருமறைக்கல்வி நிலைய இயக்குனராகவும், திருமலைதீபம் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி தற்போது பணிமாற்றம் பெற்றுள்ள மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. தே. கிங்ஸ்லி றொபட் அடிகளாருக்கு நன்றி களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வுறும் திருமறைக்கல்வி நிலைய பணியாளர்கள் சமூகம் தொடரும் அடிகளாரின் பணிகளுக்கு வாழ்த்துகளையும் இறையாசீரையும் வேண்டி நிற்கின்றது.

புதிதாக நடுநிலைய பணிகளை பொறுப்பேற்கும் பணி. டக்ளஸ் ஜேம்ஸ் அவர்களையும் வாழ்த்தி வரவேற்கிறோம்.

– திருமலைத்தீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்தி மீள் அறிவிப்பு......... 01ம் பக்கத் தொடர்ச்சி

ஜனவரி மாதம் 1ம் நாள் நாம் இறைவனின் தாய் மரியாவின் பெருவிழாவை சிறப்பித்தோம். தொடக்கமுதல் மரியா இறைவனின் மீட்புத் திட்டத்திலும் அழைக்கப்பெற்றது முதல் அத்திட்டம் நிறைவேற பொறுப்புள்ள உடனுழைப்பாளியாகவும் செயல்பட்டுள்ளார். மரியா இறைவனின் அன்னையாகவும் திருஅவையின் அன்னையாகவும் எமது திருப்பயணத்தில் உறுதுணையாக இருந்து வருகின்றார். அன்னையின் அர்ப்பணம், பணிவு, தூய்மை போன்ற நல் விழுமியங்களை நாம் எமதாக்கி இறைவனுக்கு சான்றுபகர்வோம்.

எமது மேய்ப்புப் பணியின் எதிர்நோக்காகிய ஆன்மீகம், கல்வி, சமூகப் பணிகளை நாம் பல்வேறுபட்ட வடிவங்களில் கடந்த ஆண்டில் செயல்படுத்தினோம். 2019ம் ஆண்டை விவிலிய வாசிப்பு, லூக்கா நற்செய்தி, சமூக விழிப்புணர்வு ஆண்டாக பிரகடனப்படுத்தி பல செயல்பாடுகளையும் அறிமுகம் செய்தோம். இதற்கு பங்குகள், ஆணைக்குழுக்கள், துறவற இல்லங்கள், கத்தோலிக்க அமைப்புக்களில் செயல்வடிவம் கொடுத்த ஒவ்வொருவரையும் நாம் பாராட்டுகின்றோம்.

2020ம் ஆண்டினை நாம் "நற்செய்தி மீள்-அறிவிப்பு" ஆண்டாக பிரகடனப் படுத்தியுள்ளோம். "உலகெங்கும் சென்று நற்செய்தியினைப் போதியுங்கள்" எனும் நமதாண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் கட்டளையை திருஅவையில் புதுப்பித்துச் செயல்படுத்தும் எண்ணத்துடன் 1919ல் திருத்தந்தை 15ம் பெனடிக்ட் தனது சிறப்பான திருத்தூது மடல் மூலமாக திருஅவைக்கு அழைப்பு விடுத்தார். அந்த முன்னெடுப்பின் 100 வருட நிறைவில் திருத்தந்தை பிரான்சிஸ் 2019ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தினை சிறப்பு நற்செய்தி அறிவிப்பு மாதமாக முன்மொழிந்தார். அதற்கேற்ப அம்மாதத்தை நாம் நமது மறைமாவட்டத்தில் பல வடிவங்களில் சிறப்பித்ததை நீங்கள் அறிவீர்கள்.

அச்செயல்பாடுகளின் தொடர்ச்சியாக நாம் பிறந்துள்ள 2020ஆம் வருடத்தை நற்செய்தி மீள்-அறிவிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளோம். இதற்கான ஆயத்தக் கருத்தரங்கானது கடந்த நவம்பர் மாதம் நடைபெற்றது. நற்செய்தி அறிவிப்பதென்பது திருமுழுக்குப் பெற்ற அனைவருக்குமான பணியாகும். இப்பணி குருக்கள் துறவறத்தார்களுக்கான சிறப்பான பணியாக இருந்தாலும் காலத்துக்குக் காலம் இப்பணியை இவர்கள் மட்டுமே செய்ய வேண்டுமெனும் மனநிலை பொதுநிலையினர் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இந்நிலை மாறவேண்டும். அனைவரும் முழுத் திருஅவையாக நம்பிக்கையாளர் மத்தியில் நற்செய்திப் பணியாற்ற முன்வர வேண்டும்.

திருத்தந்தை 2ம் ஜோன் பவுல் தமது "மீட்பரின் பணி"யென்கிற சுற்றுமடலில் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு உலகில் மூவகையான சூழமைவுகள் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். இதில் மூன்றாவதாகக் காணப்படுகின்ற சூழமைவானது நமது வருடாந்த கருப்பொருளினை பிரதிபலிக்கின்றது. அதாவது "நீண்ட கிறிஸ்தவ பாரம்பரியம் கொண்ட நாடுகளிலேயும், புதிதாகக் கிறிஸ்தவம் தழுவிய நாடுகளில் சிறிதளவு காணப்படுவது" இங்கேயெல்லாம், திருமுழுக்குப் பெற்றவர்களின் முழுச் சமூகங்களே, உயிருள்ள விசுவாச உணர்வை இழந்த நிலையில் உள்ளனர். அல்லது, தாம் திருஅவையின் அங்கத்தினர் என்னும் எண்ணமேயின்றி வாழ்கின்றனர். அவர்களது வாழ்வு கிறிஸ்துவினின்றும் அவரது நற்செய்தியினின்றும் வெகு தொலைவில் உள்ளது. இந்நிலையில் அவர்களுக்குப் "புதியதொரு நற்செய்திப் போதனை" அல்லது "இரண்டாம் நற்செய்திப் போதனை தேவைப்படுகின்றது"(மீட்பரின் பணி 33).

அவ்வாறே திருத்தந்தை 6ஆம் பவுல் "நற்செய்தி அறிவிப்பு" எனும் தமது திருத்தூது ஊக்கவுரையில் "திருஅவை ஓர் மறைபரப்பாளர். ஆனால் தன்னில் நற்செய்தி அறிவிப்புப் பணியை முதலில் தொடங்குகின்றது" திருஅவை நற்செய்தியை அறிவிக்கப் போதுமான புத்துயிரையும், சக்தியையும் பெற்றுக்கொள்ள அதற்கு தொடர்ச்சியாக நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும். (நற்செய்தி அறிவிப்பு 14).

இயேசுகிறிஸ்து எனும் நற்செய்தியை எமது மறைமாவட்டத்திலுள்ள அனைத்து கத்தோலிக்க சகோதர சகோதரிகளுக்கு அறிவிக்கும் எண்ணத்தோடு, அனைவரும் இப்பணிக்கான அழைப்பை உணர்ந்து செயல்பட தூண்டுகின்ற காலமாக இவ்வருடம் அமையும். இதனைச் செயல்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட குழு பல விடயங்களை முன்மொழிந்துள்ளது. இதனடிப்படையில் இவ்வருடத்திற்கான செயல்பாடுகளும் அமையும். இதற்குப் பொறுப்பாக பாப்பிறை மறைபரப்புச் சபைகளின் மறைமாவட்ட இயக்குனர் அருட்பணி X. I. ரஜீவ செயல்படுவார்.

**1.பயனாளிகள்:**

1. சிறுவர் சிறுமியர்
2. இளையோர்
3. தம்பதிகள்
4. குடும்பம்
5. முதியோர்
6. அப்போஸ்தலிக்க சபை அங்கத்தவர்கள்
7. மறையாசிரியர்கள்

**2.முன்வைக்கப்படும் தலைப்புகள்:**

1. செபவாழ்வு
2. வேதாகம அறிவு
3. திருவருட்சாதனங்கள்
4. மறைக்கல்வி
5. அடிப்படை நம்பிக்கை
6. புனிதர்கள் வரலாறு
7. மறைமாவட்ட வரலாறு

**3.கற்றுக்கொள்ளும் முறைகள்**

1. கருத்தரங்குகள்
2. குடும்ப ஞானவொடுக்கம்
3. திருமண ஆயத்தக்கருத்தரங்குகள்
4. பல்வேறு வயதினருக்கான தவக்கால செபவழிபாடு், தியானம்
5. விசேட மறைக்கல்வி அமர்வுகள்
6. வளர்ந்தோர் அஞ்சல் மறைக்கல்வி
7. விசேட விவிலிய வகுப்புகள்
8. புனிதர்கள் / மறைமாவட்ட வரலாறு பற்றிய வழிகாட்டல்

**4.கற்றல் உபகரணங்கள்**

1. திருமலை தீபம் / அலையோசை
2. ர்ழடல ஆயசல தொலைக்காட்சி
3. மறைமாவட்ட முகநூல்
4. ஏனைய பிரசுரங்கள் / வெளியீடுகள்

இவற்றோடு இணைந்து கடந்த ஒக்டோபர் மாதம் புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்ற சிறப்புத் திருப்பலியில் "நான் இயேசுவின் மறைபரப்பாளன்'' எனும் இலட்சினையோடு தமது வார்த்தையாலும் வாழ்வாலும் நற்செய்தி அறிவிக்க பலர் முன்வந்தார்கள். இதனைத் தொடர்ந்து பங்குகளில் நடைபெற்ற சிறப்புத் திருப்பலியின்போது இப்பணி செய்ய இன்னும் பலர் முன்வந்தார்கள். இவ்வருடம் இவர்கள் இல்லத் தரிசிப்பு, செபம், செப அட்டை பகிர்தல் போன்ற பல செயல்பாடுகளில் ஈடுபடவுள்ளார்கள். இவர்களுக்கும் உங்கள் ஆதரவை வழங்கும்படி அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வருடத்தில் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சிக்கும் ஆதரவும், ஒத்துழைப்பும் கொடுத்து, பங்கேற்றுப் பயனடையும்படி குருக்கள், துறவற சகோதர சகோதரிகள், பொதுநிலையினரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.


எமது மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து வளங்களையும் பயன்படுத்தி எமது நம்பிக்கையைப் புதுப்பித்து நற்செய்திப் பணியாளர்களாக அர்ப்பணத்தோடு செயல்படுவோம்.

மறைமாவட்டச் செயல்பாடுகளை விரிவுபடுத்த மறைமாவட்டத்தை மூன்று மறைக்கோட்டங்களாகப் பிரித்துள்ளோம். அவை திருகோணமலை பட்டிணமும் சூழலும், நிலாவெளி, மூதூர் ஆகும். ஒவ்வொரு மறைக்கோட்டத்திற்கும் மறைக்கோட்ட முதல்வராக ஒரு குருவானவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக் குருவானவர் ஏனைய குருக்களோடு இணைந்து தமது மறைக்கோட்டத்தில் செயல்பாடுகளை முன்னெடுப்பார். இவர்களுக்கு எமது ஒத்துழைப்பு வழங்கி பயனடைவோம்.

பங்குப் பணிகளில் இல்லத் தரிசிப்பு மிக முக்கியமானது. அனைத்துப் பங்குத் தந்தையரும் தவறாது இல்லத் தரிசிப்புக்கென நேரம் ஒதுக்கி மக்களை சந்தித்து பணிசெய்ய வேண்டுமெனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். பங்கு மக்களும் இதற்குத் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். அதேபோல ஒவ்வொரு பங்கிலும் கல்விக்குழு சமூகப் பணிக்குழு என இரு குழுக்கள் உருவாக்கப்பட்டு செயல்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறோம். எமது மறைமாவட்டப் பணிகள் தடையின்றி முன்னெடுக்கப்படவும் தேவ அழைத்தல்கள் பெருகவும் தொடர்ந்து செபிக்கும்படிக் கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதியாக, மூவொரு இறைவனின் ஆசீரும் மரியன்னையின் வழிகாட்டலும் தூய யோசேவ் வாஸ் முனிவரின் பரிந்து பேசுதலும் உங்கள் குடும்பங்களை ஆன்மீகத்தில் பலப்படுத்த வேண்டி நிற்கின்றோம்.

கிறிஸ்துவில் என்றும் உங்கள்மேல் பற்றுள்ள,



பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்
02-01-2020

## ஆறுதல் தரும் செய்தியை எடுத்துரைக்க வேண்டியது அனைவரின் கடமை



கிறிஸ்துவின் மீது கொண்டுள்ள விசுவாசத்தை உலகில் எடுத்துச் சென்று அறிவிப்பதில் உயிரூட்டத்துடன் செயல்பட வேண்டிய தேவை அனைத்துக் கத்தோலிக்கர்களுக்கும் உள்ளது.

முடங்கிப் போயிருத்தல் என்பது, கிறிஸ்தவ சாட்சிய வாழ்வுக்கும், திருஅவையின் மறைப்பணிக்கும் எவ்விதத்திலும் ஒத்துப் போவதில்லை என்பதையும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதிலும் திருஅவையின் மறைப்பணிகளில் ஈடுபடுவதில் இளையோரையும் குடும்பங்களையும் முதியோரையும் ஈடுபடுத்துவதிலும், பங்குத்தளங்கள் அதிகம் அதிகமாக, முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என விண்ணப்பித்தார்.

ஆதாரம் : வத்திக்கான் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்ததில் பிடித்தது

## வழி



காட்டில் வேலை செய்து கொண்டிருந்தார் அப்பா.
எட்டாம் வகுப்பு படிக்கும் மகனும்
அவருக்குக் கூடமாட உதவினான்.

மகன் கேட்டான்:
அப்பா, எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள். போரடிக்குது.

நிலத்தின் நடுவே கிடந்த
ஒரு பாறாங்கல்லைக் காட்டிச் சொன்னார் அப்பா:
மகனே..! இந்தக் கல்லைப் புரட்டி அப்புறப்படுத்து.

சொல்லிவிட்டு வேறு வேலையில் கவனமானார் அப்பா.
கல்லை அசைத்துப் பார்த்தான் மகன். தள்ளிப் பார்த்தான்.
எப்படியெப்படியோ முயன்று பார்த்தான்.
தோல்விதான்.
முடியவில்லை அப்பா...! கடினமாக இருக்கிறது...!
கல்லை அப்புறப்படுத்த பல வழிகள் உண்டு மகனே...
முயற்சி செய்...!
கடப்பாறை எடுத்து வந்து நெம்பிப் பார்த்தான்.
அசைந்து கொடுத்தது ஆனால் நகர்த்த முடியவில்லை.

மீண்டும் சொன்னான்:
முடியவில்லை அப்பா..! கடினமாக இருக்கிறது!
கல்லை அப்புறப்படுத்த எல்லா வழிகளையும்
மேற்கொண்டாயா?
ஆமாம் அப்பா. அசைத்துப் பார்த்தேன், தள்ளிப் பார்த்தேன்.
கடப்பாறையை வைத்து நெம்பிக்கூடப் பார்த்துவிட்டேன்.
எல்லா வழிகளிலும் முயற்சி செய்துவிட்டேன் முடியவில்லை.

அப்பா சொன்னார்:
இன்னும் ஒரு வழி இருந்ததே!
அவ்வழியில் முயற்சி செய்யவில்லையே!

தீவிரமாக யோசித்துப் பார்த்தான். வழி தெரியவில்லை:
இன்னும் ஒரு வழியா? அவ்வழி எவ்வழி என்று நீங்களே
சொல்லுங்கள் அப்பா.

வேலையை நிறுத்துவிட்டு சொன்னார் அப்பா:
நான் உன்னருகில் தானே இருந்தேன்.
என்னை உதவிக்கு அழைத்திருக்கலாமே?

**உதவுவதும் - உதவிக்கு அழைப்பதும்**
**ஊரறிய உதவும்**

அருட்பணி . தே. கிங்ஸ்லி றொபட்

# மாசி மாத கருத்தோவியம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. ஆனால் இன்று இச் செல்வத்திற்கு மிகவும் பற்றாக்குறை காணப்படுகிறது. இன்று நாட்டில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமான மக்கள் நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், புற்றுநோய், பலவிதக் காய்ச்சல்கள் என்று பல நோய்கள் தாக்கி வருகின்றன.

மேலும் தற்போது 'டெங்கு' , 'கொரோனா' போன்ற வைரசுகளினாலும் பலர் பாதிக்கப்பட்டு உயிரை இழந்தும் உள்ளார்கள். இந்நிலை எப்போது மாறும். அரசும், சுகாதார மையங்களும், மருத்துவமனைகளும் நடவடிக்கைகள் எடுத்தாலும் நோய்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இருப்பினும் நாமும் தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும் சில முயற்சிகளை மேற்கொண்டால் தான் நோய்களைக் கட்டுப்படுத்த முடியும். நமது வீட்டையும் சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்திருப்போம். இதன் மூலம் நோயற்ற சமூகத்தை உருவாக்குவோம்.

பெப்ரவரி 11ம் திகதி மரியன்னை லூர்த்து நகரில் காட்சி அளித்த நாளும் ஆகும். அன்று லூர்த்து நகரில் ஆயிரக் கணக்கான நோயாளிகள் அற்புத சுகமளிக்கும் அன்னையின் அருட்துணையை நாடி சுகம் பெற்றவர்கள் ஏராளம். இந்த அன்னை வழியாக நம்மையும் நம் நாட்டையும் விஷேடமாக நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள அனைவரையும் ஒப்புக் கொடுத்து செபிப்போம்.

மேலும் இந்த நாளில் வீரமாமுனிவரை நினைவு கூர்வதோடு. மின்விளக்கை கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன், சார்ள்ஸ் டார்வின் ஆகியோரின் பிறந்த நாட்களையும் கொண்டாடுகின்றோம்.

பெப்ரவரி 26ம் திகதி தவக்காலம் ஆரம்பமாகிறது. இக்காலத்தில் "மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்று திருஅவை அழைப்பு விடுக்கிறது. தவக்காலம் கிறிஸ்தவராகிய நமக்கு நோன்பின் மாண்பை உணர்த்துகிறது. மாறிவரும் காலச் சூழலுக்கேற்ப நமது நோன்புகளை எப்படி மாற்றியமைக்கலாம்?

***வெள்ளிக்கிழமைகளில்,***

- தொலைக்காட்சி பார்ப்பதை தவிர்ப்பது, பார்க்கும் நேரத்தைக் குறைப்பது.
- அலைபேசி - தவிர்க்க முடியாத அலைபேசியை மட்டும் ஏற்று முடிந்தால் ஊடகப் பயன்பாட்டை விட்டுவிடலாம்.
- இணையத்தளம் - முடிந்தால் இப்பயன்பாட்டை இன்று முழுவதும் தவிர்க்கலாம்.
- நாள்தோறும் சொல்நோன்பு - பேச்சைக் குறைத்து செயலை அதிகரிக்கலாம். பயனற்ற இழிவான சொற்களை அறவே தவிர்க்கலாம். கேட்போர் பயனடையும் படி தேவைக்கேற்றவாறு அருள் வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகளைப் பேசலாம், பேசுவோம்.

இந்த நோன்புகளைக் கடைபிடித்தும் ஏழை எளியவர்கள், நோயாளர்கள், முதியவர்கள், கைவிடப்பட்டவர்களின் நலன்களில் அக்கறை கொண்டு வாழ்வோம், வாழ்வாக்குவோம்.

# மாசி 2020 மறைமாவட்ட நிகழ்வுகள்

02.02.2020ஞாயிற்றுக்கிழமை : ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் - விழா.
: உவர்மலை குழந்தை இயேசு ஆலய திருவிழா
: மூதூர் மறைக்கோட்ட கத். இளைஞர் ஒன்றிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு.

04.02.2020செவ்வாய்க்கிழமை: இலங்கை மாதா பெருவிழா.
: கண்டி தேசிய குருமட விழா.
: இலங்கையின் சுதந்திர தினம்.

08.02.2020சனிக்கிழமை : மரியாயின் சேனை: கியூரியாக் கூட்டம்.
: புனித வின்சன்ட் டி பவுல் ஆலோசனை சபை மாதாந்தக் கூட்டம்.
: சிறிய கிறி. குழுமம் (SCC): மறைமாவட்டக் குழுக் கூட்டம்.

09.02.2020ஞாயிற்றுக்கிழமை : பொதுக் காலம் - 5ம் ஞாயிறு.
: சர்வதேச திருமண தினம்.
: கத். இளைஞர் ஒன்றியம்: நிர்வாக சபைக்கூட்டம்.
: மறைக்கல்வி ஆணையம்: பங்குத் தரிசிப்பு.

10.02.2020திங்கள்கிழமை : குடும்ப அப்போஸ்தலம் - குடும்ப வன்முறை தொடர்பான தேசிய பாசறை. (திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்கள்).

11.02.2020செவ்வாய்க்கிழமை : குருக்களுக்கான மாதாந்தத் தியானம்.
: பாலையூற்று - புனித லூர்து அன்னை விழா.

14.02.2020வெள்ளிக்கிழமை : திருமண முன்னாயத்தக் கருத்தரங்கு.

15.02.2020சனிக்கிழமை : திருமண முன்னாயத்தக் கருத்தரங்கு.
: மறைக்கல்வி ஆணையம் - தேர்வு 1,2,3ற்கான கருத்தரங்கு.
: (PMS) - ஊக்குவிப்பாளருக்கான கூட்டம்.
: விவிலிய ஆணையம் - வளர்ந்தோர்க்கான விவிலியப் பாடத்திட்டம்.

16.02.2020ஞாயிற்றுக்கிழமை : பொதுக் காலம் - 6ம் ஞாயிறு.
: நாராயணபுர குழந்தை இயேசு ஆலயத் திருவிழா (மூதூர் - இருதயபுரப் பங்கு)

22.01.2020சனிக்கிழமை : மறைக்கல்வி ஆணையம் - மறையாசிரியர் கருத்தரங்கு.

23.02.2020ஞாயிற்றுக்கிழமை : பொதுக் காலம் 7ம் ஞாயிறு.
: PMS - பங்குத் தரிசிப்பு: கன்னியாப் பங்கு.
: (SCC): பங்குத் தரிசிப்பு.
: கத். இளைஞர் ஒன்றியம் - கருத்தரங்கு.

26.01.2020புதன்கிழமை : திருநீற்றுப் புதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயவிழிப்புணர்வுத் தொடர் - 10

# இன்னுமா தயக்கம்

### இதுவும் கடந்துபோகும்!

இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! உங்களை திருமலை தீபம் இதழ் வாயிலாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். புதிய ஒரு ஆண்டில் நாம் காலடி எடுத்து வைக்கின்றோம். இந்த ஆண்டு நமக்கு எல்லா நலன்களும் உள்ளடக்கிய ஆண்டாக அமைய உங்களை வாழ்த்துகின்றோம்.

இன்னுமா தயக்கம் என்னும் இந்தப் பதிவின் மூலம், நம் வாழ்வில் நம் மகிழ்விற்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் பல்வேறு காரணிகளை ஆய்ந்து அவற்றைக் களைந்து விடுதலை வாழ்விற்கு நுழைய முற்படுகின்றோம். இந்த மகிழ்வின் முட்டுக்கட்டைகளையே தயக்கங்கள் என்று கூறுகின்றோம். நம் வாழ்வின் பல்வேறு தயக்கங்களை நீக்கி தடைகளற்ற விடுதலை வாழ்வுக்கு தயாராக இந்த பதிவுகள் உங்களுக்கு உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையில் இவற்றைப் பதிவிடுகிறேன். இவற்றில் ஏதும் தயக்கங்கள் இருந்தால், தயக்கமின்றி எனக்கு தெரியப்படுத்தவும்.

இந்த இதழில் நாம், நம் வாழ்வின் ஆறுதலுக்கு அதிகம் பயன்படுத்தும் ஒரு வாக்கியத்தைப் பற்றி சிந்திக்க இருக்கின்றோம். 'இதுவும் கடந்து போகும்' என்ற ஒரு வாக்கியத்தை நம் வாழ்வில் நாம் அதிகம் பயன்படுத்தியிருப்போம். இதைப் பற்றியே இந்தக் கட்டுரையில் நாம் பார்க்கிறோம்.

நாம் சிறுவர்களாக இருந்த போது, பள்ளிப் பருவம் நமக்குப் பிடிக்காத ஒன்று. ஒவ்வொரு நாளும் வீட்டுப் பாடங்கள், வேலைப் பளுக்கள், சுதந்திரம் இல்லாத நிலை என்று அந்தப் பருவத்தில் பள்ளி வாழ்க்கையை யாரும் சுவைக்கவில்லை. அந்த நேரத்தில் இதுவும் கடந்து போகும் என்று நமக்குள் ஒரு ஆறுதலைச் சொல்லிக் கொண்டு, வாழ்வின் அடுத்தக் கட்டத்தை நோக்கி காத்திருந்தோம். பள்ளி வாழ்வில் கல்லூரி வாழ்வுக்காக காத்திருந்தோம். கல்லூரி பருவத்தில், வேலைக்குப் போகும் பருவத்திற்காகக் காத்திருந்தோம். வேலைக்குப் போகும் பருவத்தில் குடும்ப வாழ்வுக்காகக் காத்திருந்தோம். குடும்ப வாழ்வு வந்தபின், மீண்டும் பள்ளி வாழ்க்கை கிடைக்காதா என ஏங்கி நிற்கின்றோம். இவை அனைத்துக்கும் காரணம், நம் மனதில் மிக ஆழமாகப் பதிந்துவிட்ட, 'இதுவும் கடந்து போகும்' என்ற எண்ணம் தான்.

இந்த எண்ணம் சரியா என்பதையே இந்தக் கட்டுரையில் நாம் பார்க்கப் போகிறோம்.

காத்திருப்பது சிலருக்கு சுகமானதாக இருக்கும். ஆனால், பொதுவாக, காத்திருப்பது என்பது நமக்குத் தேவையற்ற ஒருவித மனக்கவலையையே கொடுக்கின்றது. நாம் எதிர்பார்த்துக் காத்திருப்பது கிடைக்க வேண்டும் என்ற மனப்புழுக்கம் நம்மை கோபத்திற்கும் எரிச்சலுக்கும் ஆளாக்குகின்றது. எடுத்துக்காட்டாக, ஒரு அலுவலகத்திற்கு அவசரமாகச் செல்ல பேருந்திற்காக காத்திருக்கின்றோம் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பேருந்து வரக் காலந்தாழ்த்தும் ஒவ்வொரு நிமிடமும் நமக்கு ஒருவிதமான மன எரிச்சலை உண்டாக்குகின்றது. காரணம், காத்திருக்கும் போது, பல்வேறுவிதமான எதிர்பார்ப்புக்களை சுமந்து காத்திருக்கின்றோம். அந்த எதிர்பார்ப்புக்கள் எல்லாம் நிச்சயமாக நிறைவேறியாகவேண்டும் என்ற உள்மன உந்துதல் காரணமாக நம்மால் அமைதியாக இருக்க முடிவதில்லை, நம் மனம் அமைதியற்று அலைகின்றது. காத்திருத்தல் என்பது, ஒரு பிரச்சனையை உருவாக்கி அதனை முடிக்காமல் வைத்திருப்பதாகும். அந்தப் பிரச்சனை முடியும் வரை நம் மனம் அமைதியடைவதில்லை. எனவே கூடுமானவரை காத்திருத்தலை தவிர்த்தல் நம் மன அமைதிக்கு வழிவகுக்கும்.

**இதுவும் கடந்து போகும்!**

இந்த வாக்கியம், **"இதுவும் கடந்து போகும்"**, நம்மை காத்திருக்க அழைக்கின்றது. இன்றைய நிலை சரியில்லை, எனவே இது வேண்டாம். இது கடந்து போகட்டும். அதன் பின் நான் எதிர்பார்த்த நல்ல நிலை உருவாகும்! என்ற எண்ணம் தான், "இதுவும் கடந்து போகும்" என்ற வாக்கியம். இன்றைய நிலை சரியில்லை, எனவே, ஒரு சரியான நிலைக்காக காத்திருக்கிறோம் என்பது தான் அர்த்தம். தேவையில்லாமல் ஒரு சாத்தியமில்லாத நிலைக்காக நாம் காத்திருக்கிறோம். உண்மையில், நாம் நினைப்பது போல வாழ்வு என்றுமே மாறப்போவதில்லை.

வாழ்வு செல்லும் திசையில் தான் நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த பயணத்தில் நாம் ஒரு சில நிலைகளை நமக்கு ஏற்றாற்போல் மாற்ற விழைகின்றோம், வாழ்வில் பலவற்றை இருப்பதுபோல் ஏற்றுக் கொள்கின்றோம். வாழ்வின் பல நிலைகள் நம்மால் மாற்ற முடியாதது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு மாற்ற முடியாததை நாம் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் பெறவேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில், நாம் நமக்குள் சொல்லிக் கொள்ளும் வசனம் தான், 'இதுவும் கடந்து போகும்'. இதன் மூலம், நாம் இன்று நமக்குப் பிடிக்காததை விட்டுவிட்டு அதற்கான ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். குழந்தைப் பருவத்தில் பெரியவனாக எப்போது மாறுவோம் என்று காத்திருந்துவிட்டு பெரியவர்களானபின் குழந்தைகளாக மாற முடியுமா என்று ஏங்குவது இந்த நிலை தான். காரணம், நம் நிகழ்காலத்தை நமக்கு என்றும் பிடிக்காமலேயே போய்விடுகின்றது. எப்பொழுதும் நம் வாழ்க்கை இக்கரைக்கு அக்கரை பச்சை என்ற நிலையிலேயே சென்றுவிடுகின்றது. எனவே நம் நிகழ்காலத்தில் நாம் ஈடுபட்டு வாழத் தவறிவிடுகின்றோம்.

இன்று நாம் நம் வாழ்வை ரசித்து சுவைத்து வாழவேண்டும் என்றால், இந்த வாழ்க்கையில் நாம் ஈடுபட்டு வாழ வேண்டும். அதற்கு, இந்த வாழ்க்கை நம்முடையது என்ற எண்ணம் வேண்டும். இதுவும் கடந்து போகும் என்ற எண்ணம், நம் வாழ்க்கையிலிருந்து நம்மை அன்னியப்படுத்தி, இது எனக்குத் தேவையில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். மாறாக, இதனை நான் சந்தித்தாக வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும் போது, அந்த சூழ்நிலைக்குள் வாழ நாம் நம்மைத் தயார் செய்கின்றோம், அதன் மூலம், வாழ்வை நாம் முழுமையாக வாழ முற்படுகின்றோம்.

அன்பார்ந்தவர்களே, இறைவன் நம் வாழ்வை மிகவும் கண்ணும் கருத்துமாக வடிவமைத்திருக்கின்றார். எனவே இந்த வாழ்வில் வரும் ஒவ்வொரு நிகழ்வுமே மிக முக்கியமான அங்கமாகும். எனவே நம் வாழ்வில் வருகின்ற அனைத்தையும், அதாவது அனைத்து ஏற்றத் தாழ்வுகளையுமே நாம் அமைந்த மனதோடு ஏற்றுக் கொள்ளும் போது நாம் நம் இறைவன் நமக்காக வைத்துள்ள திட்டத்தை நிறைவேற்றும் சிறந்த கருவியாகிறோம். இல்லையானால், நம் வாழ்வைப் பாழாக்குவதோடு நம்மைச் சுற்றியுள்ளோரின் வாழ்வையும் நாம் பாழாக்கிவிடுகின்றோம்.

இறைவன் தனது பிறப்பிலே, காரிருளில் வாழ்ந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் என்று இறைவாக்கினர் வாயிலாகக் கூறுகின்றார். இறைவனின் பிறப்பு ஒருவித நிறைவைக் கொண்டு வருகின்றது என்பதே இதன் பொருளாகும். காரணம், இருள் என்பது ஒரு எதிர்மறை சக்தியல்ல, மாறாக ஒளி இல்லாத நிலையாகும். அவ்வாறு ஒளி இல்லாத நிலையில் இறைவன் தன் உடனிருப்பின் மூலம் ஒளியைத் தருகின்றார், நம் குறையைப் போக்குகின்றார். இந்த ஒளி என்பது ஒரு உருவகம். உண்மையில் தீமை என்பதும் நன்மை இல்லாத தன்மையே ஆகும். அப்படியானால், நம்மில் இல்லாத நன்மை நிலையை இறைவனின் உடனிருப்பின் மூலம் தர வந்திருக்கின்றார். தீமையுள்ள இடத்தில் நன்மை நிறையும் போது தீமை காணாமற்போகின்றது.

இன்று நம் மனங்களிலும், இது சரியில்லை என்ற குறை எண்ணம் இருக்கும் போது அது பல தீமையின் உருவாக்கங்களாக அமைகின்றது. அதற்கு மாறாக, இது இறைவனால் எனக்குக் கொடுக்கப்பட்டது என்ற நிறைவு எண்ணம் வருகின்ற போது நம் வாழ்வில் அனைத்து விழிமியங்களும் சாத்தியமாகின்றன. இன்று நாம், இறைவன் நம்மை நிறைவானவர்களாக படைத்திருக்கின்றார் என்பதை உணர்வோம், இதுவும் கடந்து போகும் என்று கூறி காத்திருப்பதை தவிர்ப்போம், இன்றுள்ள நிலை எனக்காக இறைவனால் கொடுக்கப்பட்டது என்பதை உணர்ந்து மகிழ்ந்து வாழ்வோம். இறைவனின் அன்பும் சமாதானமும் நம்மை என்றும் நிரப்புவதாக. நன்றி.

என்றும் அன்புடன், **அருட்பணி அலெக்ஸ் செல்லையா , க. ச**

---

## தேடுகின்றோம் தேடுகின்றோம் மனிதருள் மாணிக்கத்தை



கவலைப்படுகிறார்கள்
இல்லாத பணத்திற்காக!
கவலைப்படுவதேயில்லை
இழந்த பண்புகளுக்காக !

அலைகிறார்கள்
சொத்துக்கள் தேடி சுகங்கள் நாடி
அலைவதேயில்லை சொந்தங்கள் தேடி
பந்தங்கள் நாடி!

சிந்தித்துப் பார்ப்பதேயில்லை !
எப்படி வாழ்ந்தால்
சொந்தங்களை பேணலாம்
பந்தங்களுடன் வாழலாம் என்று!

உடைத்து விடுகிறார்கள்
உள்ளங்களை உறவுகளை
உயர் இல்லையெனில்!

உணர்வதேயில்லை !
உறவுகள் தான் என்றென்றும்
உண்மையான சொத்துக்களென்று !

உதைத்து விடுகிறார்கள்
உதவவில்லை நீ என்று!
உணரத் தவறி விடுகிறார்கள்
மனிதருக்குள் மாணிக்கத்தை
அதை உணர்ந்தால் நம்மில்
தேடுவதைக் கண்டடைவோம் - நிஜத்தில்

ஆக்கம் : அ.ஜெ. நோயல் டானியேல்
உவர்மலை, திருகோணமலை

---

## அன்பினை உணர்வோமே.....

அருட்பணி என்.சி. அருள்வரதன்



நாட்டிற்கு வேண்டியது எதுவோ
அதுவே நாட்டிலே
தோன்ற வேண்டும்
மக்களனைவரும் ஒன்றாகியே
மனமகிழ்வோடு வாழ்வதற்கு
அன்பே எங்கும்
நிலைகொள்ள வேண்டுமே

பிளவுகளை உருவாக்கி விட்டு
உறவுகளை உடைத்து விடும்போது
அன்பு அங்கு மறைந்து விடுமே.
வேண்டாம் இந்த கொடியநிலை
வேண்டுவோம் அன்பே உருவாகவே

மதங்கள் வேறுபட்டு இருந்தாலும்
மனங்கள் ஒன்றுபட்டு இருக்கவேண்டும்
எம்மதமும் காட்டும் நல்வழிகள்
அவ்வழியில் நாமும் செல்லும் போது
அன்பினை நாமும் காண்போமே

பகையோடு வாழும் வாழ்வினாலே
பாவமே நம்மோடு இணைகின்றதே
துளிகூட அன்பின்றி வாழும் போது
துயர்களே நமை அங்கு
சூழ்ந்து கொள்ளும்
உணர்வோம் இதனை
உணர்ந்து தெளிவோமே

வாழ்வின் வழிகளை அறிந்து கொண்டே
நல்வழிப் பாதைகளால் நடப்போமே
உண்மையில் அன்பே நமக்கு என்றும்
உற்ற துணையாய் நிற்கும் போது
வெற்றியே அதன் படி வாழ்வோமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து வாழ்கின்றார் - திருத்தூது ஊக்கவுரை திருத்தந்தை பிரான்சிஸ்

அருட்பணி அ.அ. நவரெத்தினம்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

சென்ற இதழ் தொடர்ச்சி..................


இளையோர் பணியில் திருஅவை நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. இவைகள் இளையோரை உண்மையாக வரவேற்பதாயும், அவர்களுக்குரிய இல்லமாகவும், குடும்பமாகவும் திகழ வேண்டும். அவைகள் இளையோர் இலகுவாக வந்து செல்லக்கூடிய இடங்களாக இருத்தல் வேண்டும். அந்தவகையில் ஏற்கனவே உள்ள இளையோர் நிலையங்கள் பாதுகாக்கப்படவும், புதியவைகள் உருவாக்கப்படவும் வேண்டும். அவ்வாறே கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் பேணப்படுவதுடன், அவைகள் வெறுமனே கல்வியினை வழங்குவதுடன் மட்டும் நின்றுவிடாது நற்செய்திப்பணியினை ஊக்கப்படுத்துவதுடன், பண்பாட்டு உருவாக்கத்திலும் ஈடுபட வேண்டும். மேலும் மேற்சொன்ன நிறுவனங்கள் விளையாட்டு, கலை போன்ற பல்வேறுபட்ட செயல்பாடுகளில் ஈடுபட்டாலும் இறைவார்த்தை, திருப்பலி, ஒப்புரவு, புனிதர்கள் வாழ்வின் முக்கியத்துவம் போன்றவற்றையும் மறந்து விடக்கூடாது.

இளையோர் பணியானது நமக்கு பரீட்சயமான இடங்களோடு மட்டும் மட்டுப்படுத்தப்படக் கூடாது மாறாக இளையோர் கூடுகின்ற அனைத்து பொதுவெளிகளையும் நாடிச்செல்ல வேண்டும். இத்தகைய செயற்பாடானது வெளிநோக்கி நகரும் செயலினை ஆதரிப்பதுடன், அத்தகைய இடங்களில் திருஅவையானது தனது கதவுகளை திறந்துள்ளது என்பதனைக் காண முடியும். இத்தகைய பொதுவெளிகள் பல்வேறுபட்ட நோக்குகளுடன் இருப்பவர்களையும், ஏனைய சகோதர சமயநெறிகளைச் சார்ந்தவர்களையும், சமயங்களிற்கு வெளியே இருப்பவர்களையும் வரவேற்க உதவுகின்றது. இதில் நாம் முக்கியமாகக் கொள்ளவேண்டியது யாதெனில் அனைத்து இளையோரும் இறைவனின் இதயத்தில் உள்ளார்கள் எனவே அவர்கள் திருஅவையின் இதயத்திலும் உள்ளார்கள் என்பதாகும்.

திருப்பயணங்கள் போன்ற பிரபல்யமான பக்தி முயற்சிகளில் பங்கேற்பது இளையோரின் பணியில் ஓர் அங்கமாகும். இவற்றில் வயது முதிர்ந்தவர்களின் உடன் பயணிப்பினை இலகுவில் தட்டிக்கழிக்க முடியாது. முதியோரின் குறிப்பிடத்தக்க தராதரங்களாக, பிரமாணிக்கமுள்ள கிறிஸ்தவர், புனிதத்துவத்தை நாடுபவர், நம்பிக்கைமிக்கவர், தீர்ப்பிடாதவர், செவிசாய்க்கின்றவர், தன்னிலை அறிந்தவர், தனது குறைகளை அறிந்தவர், தனது மனிதத்துவத்தை ஏற்பவர், தவறுகள் இழைப்பவர், இளையோரில் நம்பிக்கை கொள்பவர் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**அலகு 8: அழைப்பு**

அனைவர் மட்டிலும் கடவுள் சிறப்பான திட்டத்தினை வைத்துள்ளார், அதுமட்டுமல்லாது அனைவரையும் புனித வாழ்விற்கு அழைத்துள்ளார் என்பதனை இவ்வலகினூடாக திருத்தந்தை எடுத்தியம்புகிறார். கடவுள் அனைவரையும் நட்பு வாழ்விற்கு அழைத்துள்ளார். இயேசுகிறிஸ்து ஒவ்வொரு இளையோரினதும் நண்பராக இருக்க விரும்புகிறார். ஒவ்வொரு அழைப்பும், ஒருவர் அடுத்தவருக்காக இருக்கவேண்டும் என்றும், மறைபரப்புப்பணியில் ஈடுபட வேண்டுமென்றும் அழைக்கிறது. அடுத்தவர்களுக்காக வாழ்வதென்பது குடும்பம், வேலையென இருவடிவங்களில் வெளிப்படும். அநேகமான இளையோர் அன்புசெய்ய வேண்டுமென்கிற அழைப்பினை ஒரு குடும்பத்தை உருவாக்கும் கண்ணோட்டத்தில் நோக்குகின்றனர். இத்தகைய அன்பானது கடவுளின் அருளால் திருமணம் எனும் அருளடையாளத்தில் நிறைவுறுகிறது. கடவுள் நம்மை ஆண் பெண் என்கிற பால் தன்மையில் படைத்துள்ளார்.



பாலியல் தன்மையானது கடவுளின் அழகான கொடையாகும். அதன் நோக்கம் யாதெனில் அன்பு செய்வதும், வாழ்வினை விருத்தியாக்குவதும் ஆகும். குடும்பங்களில் ஏற்படுகிற மணமுறிவு, பிரிவினைகள் இவற்றின் மத்தியிலும் பெரும்பாலான இளையோர்களுக்கு குடும்பமே ஆதாரப் புள்ளியாகவுள்ளது. அத்தகைய சூழ்நிலைகளில் பிள்ளைகளுக்கு பெற்றோரின் பெற்றோர் தீர்க்கமான, ஆரோக்கியமான பங்காற்றுகின்றார்கள். அத்தகையவர்கள் குடும்பத்தை ஒன்றிணைத்து வைப்பதிலும், அன்பு காட்டுவதிலும், உதவி புரிவதிலும், மறையறிவினை வழங்குவதிலும் முக்கியமான பங்கினைச் செய்கிறார்கள். அவர்களது இப்பணியானது பாதுகாக்கப்பட்டு, பாரட்டப்பட வேண்டும்.

தொழிலானது இளையோர் தங்களது நடைமுறைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவும், அவர்களது கனவுகள், நோக்குகளுக்கான பொருளையும், நிறைவினையும் கண்டுகொள்ள உதவுகிறது. மறுபக்கத்தில் ஒரு சில இளையோர் தங்களுக்கான வேலைகளில் புறக்கணிப்பு, ஒதுக்கப்படுதல் போன்றவற்றையும் உணரமுடியும். இன்று பெரும்பாலான நாடுகளில் இளையோர் வேலைவாய்ப்பானது பாரிய சிக்கலாகவுள்ளது. இத்தகைய பரவலான வேலைவாய்ப்பற்ற சூழ்நிலைகளிலும் "இளையோர் தங்களது வாழ்வின் கனவுகளை விட்டுவிடக்கூடாது, அத்துடன் தாங்கள் தோற்றுப்போய் விட்டோம் என்றும் உணரக்கூடாது" என்று திருத்தந்தை எடுத்துரைக்கிறார். திருத்தந்தை தொடர்ந்து கூறுகையில் "குடும்பம், வேலை என்கிற சூழ்நிலைகளுக்கு அப்பால் ஒரு சில இளையோர் குருத்துவம், துறவற அர்ப்பணம் போன்ற வாழ்விற்கும் அழைக்கப்படலாம். அத்தகைய அழைப்பினை தங்கள் வாழ்வில் உணர்கின்ற இளையோர் இறைவனில் நம்பிக்கை கொண்டவராய் அதில் ஈடுபட முன்வர வேண்டும்" என்கிறார்.

**அலகு 9: ஆய்ந்தறிதல்**

ஒருவரது வாழ்வின் அழைப்பினை அறிந்துகொள்ள ஆய்ந்தறிதல் முக்கியமானதாகும் அது இல்லாதவிடத்து நம்மைத்தாண்டி அனைத்துவிதமான செயற்பாடுகளுக்கும் நாம் இரையாகி விடுவோம். ஆய்ந்தறிதலானது கடவுள் நமக்கு முன்னால் வைத்திருக்கின்ற தனித்துவமான, நம்மால் இலகுவில் புரிந்துகொள்ள முடியாத அவரது திட்டத்தினை அறிய உதவுவதுடன், நம்மை அறிந்து அன்பு செய்கிற கடவுளுக்கு முன்னால் ஒருவரது வாழ்வின் நோக்கத்தையும் அறிந்து கொள்ளவும் உதவுகிறது. இளையோர் தங்களது வாழ்வினை ஆய்ந்தறிவதில் குருக்கள், துறவியர், பொதுநிலை நிபுணர்கள் மற்றும் ஏனைய தகுதி வாய்ந்த இளையோரின் உதவியினை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நிறைவுரை

இறுதியாக திருத்தந்தை உலகுவாழ் இளையோருக்கு விடுக்கும் அழைப்பு யாதெனில் "இளையோர்களால் நற்கருணையில் தினமும் ஆராதிக்கிப்படுகின்றவரும், நாளாந்தம் துன்புறும் சகோதர சகோதரிகளில் வெளிப்படுபவரும், தம்மை அளவுகடந்த முறையில் அன்பு செய்கிறவருமாகிய இயேசுவின் திருமுகத்தால் கவரப்பட்டு அவர்கள் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கவேண்டும்" என்பதாகும்.

நன்றி

# மனிதவுருவான தெய்வம் இயேசு

ஒரு கிராமத்தில் இரு நண்பர்கள் இருந்தனர். இருவரும் வேறு வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர் மற்றவர் இந்து மதத்தைச் சார்ந்தவர் இவர்கள் இருவரும் படிப்பை முடித்துவிட்டு வேலையின்றி இருந்ததைக் கண்ட அவர்கள் பெற்றோர் இவர்களை வெளிநாடு அனுப்ப முடிவு செய்தனர். அந்த முடிவு சரியானதா என்று கேட்க அவரவர் தெய்வங்களிடம் மன்றாடினர். இவர்கள் இருவரும் ஆருயீர் நண்பர்களாய் இருந்தாலும் தங்கள் கடவுளின் மட்டில் அதிக விசுவாசம் உடையவர்கள் ஏன் மதப் பிரியர்கள் என்றே சொல்லலாம். இவ்வாறாக அவர்கள் தங்கள் கடவுள் என்று கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர் இயேசுவையும், இந்து மதத்தை சார்ந்தவர் ஆஞ்சிநேயர் என்று அழைக்கப்படும் அனுமானையும் வழிபட்டு வந்தனர். இவர்கள் வேண்டுதலுக்கு செவிசாய்த்த கடவுளும் இவர்கள் வெளிநாட்டுப் பயணத்தை ஆசீர்வதித்தார். இருவரும் வெளிநாடு சென்றனர் தங்கள் கடவுளின் ஆசீர்வாதத்துடன் நல்ல வேலை ஒன்று கிடைக்க வேண்டி மன்றாடினார்கள். அதுவும் கிடைத்தது இவ்வாறாக எந்த ஒரு செயலைச் செய்யும் முன்பும் இருவரும் அவரவர் தெய்வங்களிடம் மன்றாடினர். ஒரு நாள் இருவரும் பேசிக் கொண்டனர் நம் கடவுள் நமக்கு கேட்பது எல்லாம் தந்து விட்டார்.

இனி என்ன தான் கேட்போம் என்று கேட்ட போது கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர் கூறினார் நான் என் ஆண்டவரிடம் இயேசுவே நான் உம்மைப்போல் மாறனும் என்று கேட்கப்போகிறேன் என்றார். தன் நண்பனும் நானும் என் கடவுளைப் போல மாறனும் என்று கேட்பேன் என்று கூறி இருவரும் மன்றாடினர். அவர்கள் மன்றாட்டைக் கேட்ட ஆண்டவரும் அவ்வாறே ஆசிவழங்கினார் மாதங்கள் பல கடந்ததும் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர் இயேசுவைப் போல அழகிய ஆண்மகனாய் தோற்றமளித்தார். ஆனால் இந்து மதத்தை சார்ந்தவர் நிலை மிகவும் பரிதாபமாக தோற்றமளித்தது. வால் ஒன்று உருவானது உடல் முழுவதும் உரோமங்கள் கொண்ட ஒரு மனிதனாக தோற்றமளித்தார். அடுத்திருப்பவர்கள் அவரை ஏளனமாக பார்ப்பதைக் கண்டு தன் நண்பனிடம் உன் தெய்வம் இயேசுவிடம் என்னையும் அவரைப் போல் மாற்றச் சொல்லி மன்றாடும் படி கூறி தாமும் இயேசுவே ஆண்டவரே என்னையும் உம்மைப் போல் மாற்றும் என்று மன்றாடினார் மீண்டும் மனித முகம் கொண்ட ஆண்மகனாய் தோற்றமளித்ததை கண்ட இந்து மத நண்பன் இயேசுவே என் ஆண்டவரே தெய்வங்களில் மனிதவுரு எடுத்த உண்மைக் கடவுள் நீர் தாமே என்று கூறி இயேசுவை தம் மீட்பராய் ஏற்று போற்றிப் புகழ்ந்தார்.

சு. கௌசல்யா
இல. 216/12 சுடரொளி ஒழுங்கை
பாலையூற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன மகளின் சிறிய சாட்சி



சின்ன மகளின் சிறிய சாட்சி
கோதுமை மணிகளான எம்மீது
நுளம்பு என்னும் பெயர் கொண்ட
தீயோன் வந்து டெங்கு என்னும்
நோயை விதைத்துச் செல்ல
அந்தோ பரிதாபம் சிறுவர்கள் நாங்கள்
நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து
தீயோனை எதிர்கொள்ள முடியாமல்
சாவின் விளிம்பு வரை சென்று
சர்வ வல்லவரின் துணை கொண்டு
திரும்பி வந்த சிறுமி என் கதை கேளுங்கள்
காலையில் பூத்த மலர் போல
பாடசாலை சென்ற நானும்
வாடிய மலர் போல முகவாட்டத்துடன்
வீட்டிற்கு திரும்பி வந்தேன்
குழந்தை என் வாட்டம் கண்ட - என் அன்னை
என்னவோ என்ன ஆச்சோ என்று கூறி
நெற்றியிலே கையை வைத்து பார்த்த போது
நெருப்பாய் காய்ச்சல் காய்கிறது என்று சொல்ல - தந்தையவர்
வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்கள்
வைத்தியரும் மருந்து தரக் குடித்தவுடன் காய்ச்சல்
மறைந்தது
இருந்தபோதும் தீயோனவன் பதுங்கி நின்றான் என்னுள்ளே
ஆறு நாள் ஆன பின் விடிய விடிய
வாந்தியுடன் வந்த காய்ச்சல்
வைத்தியசாலை சென்ற காட்டிய போது
டெங்கு என்னும் உயிர்கொல்லி காய்ச்சல்
என்றுரைத்தார் வைத்தியரும்
இரத்தம் சிறுநீர் அளவுகளும் குறைந்த விட
சின்னஞ்சிறு பிள்ளை எனக்கு
சிறுநீர் பட்டை வைத்த காட்சி கண்டு
என் அன்னைஅழுது நின்றாள்
சேலேன் என்றும் ஸ்கேனிங் என்றும் என்னன்னவோ
பரிசோதனைகள் கண்களின் கண்ணீருடன்
பார்த்து நின்றாள் என் அன்னை
குருக்கள் பலர் வந்து பார்வையிட்டு சென்றபோதும்
இரவினிலே திருவிவிலியம் வாசிப்பதும் செபிப்பதுமாய்
பல இரவு கண்விழித்துப் பார்த்திருந்தாள் என் அன்னை
குருக்கள் கன்னியரும் வந்து பார்த்த செபித்தனரே
பலரும் பரிசுத்தரிடம் மன்றாடிய மன்றாட்டில்
தீயோனின் கையிலிருந்து பரிசுத்தரும் காத்தாரே
என்னை இன்றும் இனியும் தீயோன் எம்மை
நெருங்காமல் பாதுகாப்பதற்கு
சூழல்தனை சுத்தம் செய்ய உதவிடுவோம்
கோதுமை மணிகளிடையே களைகளை விதைக்காமல்
காற்றினை கடிந்து கொள்ள கர்த்தரை தினம் மன்றாடுவோம்

ஆக்கம் : சு. சுவேக்கா
216/12, சுடரொளி வீதி,
பாலையூற்று

# நல்லதை நினைப்போம் குட்டிக்கதை ஒன்று

FR. NC



ஒரு கிராமத்திலே பல்வேறு பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களுள் இருவர் இருவரிடமும் வேறுபட்ட குணங்கள் ஒருவரைப்பார்த்தால் அவர் எவருக்குமே எந்தத் தொல்லையும் கொடுக்கமாட்டார். தன்னால் முடிந்தவரை எல்லோருக்கும் நன்மைகளே செய்வார். அதனால் அவரைத் தேடிவருபவர்கள் அதிகம்.

மற்றவரை எடுத்துக் கொண்டால் நல்லதையே நினைக்காதவர் தீயவையே அவரின் செயல்கள் யாருமே அவரிடம் போவதில்லை காரணம் பயம். இருவரின் செயல்களிலிருந்தும் ஒன்றை மட்டும் நாம் உறுதியாகக் கூறலாம் நல்லதை நினைத்தால் நல்லது விளையும் தீயதை நினைத்தால் தீயதே விளையும் என்பது இவர்களின் வாழ்க்கையில் வெளிப்படும் உண்மையல்லவா.

சென்ற மாதத் தொடர்ச்சி........

# நீதிமன்றங்களும் மத்திய சபைகளும்



**மத்தியஸ்த குழாம்:-** மத்தியஸ்த சபை ஆணைக்குழுவினரே ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவில் மத்தியஸ்த குழாம்களை நியமிப்பார். குழாமில் மத்தியஸ்தர்களை அப்பகுதி சனத்தொகையைப் பொறுத்து எண்ணிக்கையாக கூட்டுவார்கள். குழாத்திற்கு ஒருதலைவர் , ஒரு உபதலைவர் உட்பட ஏனைய மத்தியஸ்தர்களை அரசாங்க வர்த்தமானி மூலம் நியமிப்பர். இச் சேவை புரியும் வரை சமாதான நீதிவான்களாகவும் கடமை புரியும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

**மத்தியஸ்த சபை:-** ஒரு பிரதான மத்தியஸ்தரையும் இரு மத்தியஸ்தரையும் கொண்ட சபை மத்தியஸ்த சபை ஒரு பிணக்காக ஆராய்வதற்கு மூவர் அடங்கிய குழுவை பிணக்குகாரர் விரும்பிய மத்தியஸ்தரை விரும்பும் பட்சத்தில் குழாம் தலைவர் நியமிப்பார்.

**மத்தியஸ்த சபையின் நோக்கம் :-** தண்டனை கொடுப்பதற்கல்ல மாறாக இரு தரத்தினரையும் அழைத்து இயன்ற அளவிலான ஆலோசனைகளை சமமாக வழங்கி இருவருக்கும் இடையில் ஏற்றுக் கொள்ளக கூடிய சமாதானத்தையும் கூட்டாக உருவாக்கிக் கொடுப்பதே சபையின் நோக்கமாகும். இதன் மூலம் செயற்படுவதால் அவர்களது பயம், குரோதமனப் பாங்கு, பகைமை உயர்வு, பழிவாங்கல் நீங்கி உண்மையான சமாதானம் விட்டுக்கொடுப்புகளுடன் கூடிய இணக்கம் ஏற்பட வாய்ப்புகள் உருவாகின்றன.

மத்தியஸ்த சபையில் ஆற்றுப்படுத்தும் பிணக்குகள்:-குடும்ப பிணக்குகள் . அடிபிடி, பணக்கொடுக்கல் வாங்கல் , எல்லை தகராறு , பயமுறுத்தல் மற்றும் நீதி மன்றங்களில் இருந்து ஆற்றுப்படுத்தப்படும் பிணக்குகள் , பொலிஸ் நிலையங்களில் இருந்தும், சகல வங்கிகள், சமுர்த்திக்குழு , தே.வி. அதிகாரசபை, டெலிக்கொம் நிறுவனத்தில் இருந்து வரும் கடன் அறவீடு தொடர்பான பிணக்குகள் மத்தியஸ்த சபையில் ஆற்றுப்படுத்தலாம்.

மத்தியஸ்த சபையில் பிணக்குகளைக் கேட்டறியும் முன் சில விடயங்களை மனதிற் கொள்ள வேண்டும்.

இரகசியம் பேணப்படல் வேண்டும்.
இரு தரத்தினருடன் அன்பாக உரையாட வேண்டும்.
தாமாக எடுக்கும் தீர்மானத்திற்கு மதிப்பளித்தல்.
தனிப்பட்ட இலாபத்தை எதிர் பார்க்காதிருத்தல் வேண்டும்.
எவரையும் வற்புறுத்தக் கூடாது.
நல்ல ஆலோசனைகளை வழங்க வேண்டும்.
இணக்கப்பாட்டிற்கு வரக்கூடிய யுத்திகளைக் கையாள வேண்டும்.

இப்படியான விடயங்களைக் கருத்திற்கொண்டு பிணக்குனளை ஆராயும் போது பிணக்கின் தன்மையை நன்கு அறிந்து முதலில் சாதகமான சூழலை உருவாக்க வேண்டுக். அவர்களை வரவேற்று வருகை குறித்து நன்றி கூறவேண்டும். 1ம் தரத்தினர் கூறும் பிணக்குகளை நன்கு ஆழ்ந்து கவனிக்க வேண்டும். அவர்கள் விடயத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர்களாகவும் நம்பத் தகுந்தவர்களாகவும் நடக்கவேண்டும். அதே போன்று 2ம் தரத்தினரது விடயங்களையும் நன்கு கேட்டறிந்த அவர்கள் எதனைக் குறிப்பிட்டு பிணக்காக ஆற்றுப்படுத்துகிறார்கள். என்பதனை நன்கு ஆழமாகக் கருத்திற் கொணடு அவர்களிடம் மாற்று யோசனைகளை அறிவதற்குத் தனிமைப் படுத்தி கேட்டறிந்த சில தீர்வுகளை எடுக்கும் பட்சமாக நேரடியாக இருவரும் வேறுபாடுகளை மறந்து கதைப்பதற்கு நல்ல தீர்வுகளை ஒருவரையும் பாதிக்காத வகையில் எடுப்பதற்கு உதவுதல் ஒரு நல்ல வழிமுறையாகும். இது போன்ற பிணக்குகளை தீர்த்து சமாதானப்படுத்தி விடுவதால் அவர்களது உறவு நீடிக்கும் பகைமை எண்ணம் இல்லாமல் போய் விடும் நல்ல சுபீட்சமாகவும், சுதந்திரமாகவும் வாழலாம்.

இதற்குச் சமமாக "தொடர்பாடல்" முக்கிய விடயமாகிறது. தொடர்பாடல் என்பது மக்கள் தங்களது எண்ணிக்கைகளையும், கருத்துக்களையும், தகவல்களையும், உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ளும் ஒரு முறையாகும் தொடர்பாடல் இரண்டு வழிகளில் செயற்படுகிறது.

**வாய்மொழி மூலமான தொடர்பாடல்:-** வாய்ப்பேச்சு அல்லது எழுத்து மூலம்

**அங்க அசைவு மூலமான தொடர்பாடல்:-** வார்த்தையற்ற தொடர்பாடல் மத்தியஸ்தர் பிணக்குகளைக் கருத்திற் கொடுப்பதற்கு தொடர்பாடல் முக்கிய பங்காகிறது.

**(உ+ம்.)** தாக்குதல் போன்ற செயற்பாடுகள், குற்றம் காணுதல், அவதூறு சொல்லல், அறநெறி காட்டல், அறிவுரை கூறல் அதிகாரம் காட்டுதல் :-கட்டளையிடல், அச்சுறுத்தல், ஆணையிடல் வேறுவழிகாட்டல்.

ஏனைய வாய் வழிதடைகள்:- கத்துதல், பெயர் சொல்லல், ஒத்துழைக்கமறுத்தல் போன்றவை தொடர்பாடலுக்கு முக்கிய தடைகளாகின்றன. மத்தியஸ்தர் சிறந்த திறனானவராக இருத்தல் அவரது செயற்பாடுகள் தொடர்பாடல் தடைகளை மீறி திறன்களை வளர்க்க வேண்டியது முக்கியமாகும் மேலும் வெற்றிகரமாக செயற்பட சிறந்தது தொடர்பாடல் திறனுக்கும் இத்திறன் நாம் பாவிக்காமலிருந்தால் திறந்தவருக்கு உதவ முடியாமல் போய்விடும்.

மத்தியஸ்தத்திற்கான உ+ம் -தந்தையொருவருக்கு 3 பிள்ளைகள் மூவரும் வெவ்வேறு குணாதிசயம் கொண்டவராக இருந்தார்கள். ஒரு நாள் தந்தை கடைத் தெருவிற்குச்சென்று மரக்கறிப் பொருட்களை வாங்கி மிகுதிப்பணத்திற்கு மாற்றிய பணம் இல்லையென 1 தோடம்பழத்தைக் கொடுத்தார். அத்தோடம்பழத்தை வீட்டிற்குக் கொண்டு வந்ததும் பிள்ளைகளுக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் மூவரும் தமக்குத் தேவையென முரண்பட்டனர் தந்தையார் நன்கு யோசித்து ஒவ்வொரு பிள்ளையிடம் அவர்களது தேவைகளைக் கேட்க 1வது பிள்ளை தனக்கு மேல் தோலைப் பக்குவமாக வெட்டித்தரக் கேட்டார்.2 வது பிள்ளை தனக்கு கைவேலைக்காக கொட்டைகள் முழுவதும் தேவை என்றான். 3வது பிள்ளை தனக்கு கரைத்துக் குடிக்க சாறு வேண்டுமெனக் கேட்டார். பின்னர் தந்தை நன்கு யோசித்து தோலை நன்றாக சீவி எடுத்து 1வது பிள்ளைக்கும், 2 வது பிள்ளைக்குத் தேவையான கொட்டையை 2 வது மகளுக்கும் பிழிந்தசாரை . 3வது மகளுக்கும் கொடுத்ததில் மூவரும் திருப்தியடைந்தனர். இது போன்ற செயற்பாடுகளை நன்கு சிந்தித்து செயற்படுவது சிறந்த மத்தியஸ்தரின் சிறப்புத் தன்மையாகும்.

மத்தியஸ்த சபையில் பெண்களது பங்களிப்புக்கள் குறைவாகக் காணப்படுகின்றன. பிணக்கிற்கு வரும் பெண்கள் தொகை அதிகமாகக் காணக்கூடியதாகின்றது. அதிகமாகப் பணக் கொடுக்கல் வாங்கல்களே சில சமயங்களில் பெண்கள் தங்களது பிணக்கு விடயத்தை அந்தரங்க விடயங்களாயினும் மனம் திறந்து மத்தியஸ்தரிடம் கூற யோசிப்பார் இது பொதுவாக நடைபெறும் விடயங்களாகும். சில வேளைகளில் வயது முதிர்ந்த அனுபவசாளிகளைத் தெரிவாக்கி அவர்களிடம் விடயங்களை எடுத்துக் கூற தகுதியானவர் ஒழுங்கு செய்வார்.

நன்றி - தொடரும்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி கற்போம்

## கிறிஸ்தவர்கள்



❖ கிறிஸ்தவர்களாக நமது கடமை என்னவென்றால் எப்பொழுதும் பரலோகத்தை நமது கண்களிலும் பூலோகத்தை நமது காலுக்கடியிலும் வைப்பதாகும்.

**- மேத்யூ ஹென்றி**

❖ கிறிஸ்துவின் அழைப்பைப் பெறாத ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்தவனல்ல

**- கே.எஸ். ஆமோஸ்**

❖ உங்கள் கிறிஸ்துவை விரும்புகிறேன், ஆனால் உங்கள் கிறிஸ்தவர்களை விரும்பவில்லை. ஏனெனில், உங்கள் கிறிஸ்தவர்கள் உங்கள் கிறிஸ்துவைப் போல் இல்லை.


**- மகாத்மாகாந்தி**

❖ கற்றுக் கொள்கிற கிறிஸ்தவர்கள் வளர்கிற கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் கற்பதை நிறுத்தும் போது, அவர்கள் வளர்வதை நிறுத்துகிறார்கள்.

**- ஜான் வெஸ்லி**

❖ கிறிஸ்தவனாய் இருப்பது என்பது, வெறுமனே கிறிஸ்துவை விரும்புவதல்ல, கிறிஸ்துவைப்போல் இருப்பதாகும். கிறிஸ்துவைப் போல இருக்காதவன் கிறிஸ்துவை விரும்பாதவன்.

**- தெரேசா வெஸ்ட்**



❖ முதலாவதாக கிறிஸ்தவராகிய நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் போல வாழத் தொடங்குங்கள். இரண்டாவதாக, உங்கள் சமயத்தைக் கலப்படமின்றியும் சாரம் குறைந்து போகாதபடியும் பின்பற்றுங்கள். மூன்றாவதாக, கிறிஸ்தவத்திற்கு ஆதாரமும் மையமுமாக இருக்கக் கூடிய அன்பிற்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

**- மகாத்மா காந்தி**

❖ சோதிக்கப்படாத ஆயிரம் கிறிஸ்தவர்களைக் காட்டிலும் சோதிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன் சிறந்தவன்

**-மார்டின் லூதர்**

❖ கிறிஸ்தவனாய் இருப்பதற்குப் பொருள் மன்னிக்க முடியாததை மன்னிப்பது தான். ஏனெனில் தேவன் உன்னில் மன்னிக்க முடியாததை மன்னித்திருக்கிறார்.

**- சி.எஸ். லூயிஸ்**

❖ அண்டை வீட்டாருக்கு கிறிஸ்துவைப் போல இருப்பதுதான் ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாகும்.

**- மார்டின் லூதர்**

❖ ஒரு மனிதன் அவன் எங்கு இருக்கிறானோ அங்கு கிறிஸ்தவனாக இருக்கவில்லையென்றால் வேறெங்கும் அவன் கிறிஸ்தவனாக இருக்க முடியாது.

**- ஹென்றி வார்டு பீச்சர்**


❖ கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் காண்கிறதைக் கொண்டுதான் மக்கள் கிறிஸ்தவத்தை நிதானிக்கின்றனர்.

**- மாக்ஸ் வெல்**

*நன்றி - கிறிஸ்தவ எழுப்புதல் பொன்மொழிகள்*

# புனித லூக்கா நற்செய்தி
# அதிகாரம் : 19-21
# போட்டி முடிவுகள்

**பங்குபற்றியோர் : 68 பேர்**
**மிகச்சரியாக விடையளித்தோர் : 23 பேர்**



1ம் பரிசு 500/-
செ. பெர்னடேட் ரூபினி
இருதயபுரம்
மூதூர்

2ம் பரிசு 300/-
புஸ்பா சேவியர்
இல 58/6, மத்திய வீதி,
7ம் ஒழுங்கை
உவர்மலை

3ம் பரிசு 200/-
நிரோஷன் நிரோன்
6ம் வட்டாரம்
சாம்பல்தீவு

பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றியும்





# அன்றாட வாழ்வில் தத்துவங்கள்

## 11. தீர்ப்பிடுதல்

எமது வாழ்விலே அடிக்கடி மற்றவர்களைத் தீர்ப்பிடுகிறோம். ஒவ்வொருவருடைய செயலுக்கும் பின்னணியிலே மற்றொரு காரணம் உண்டு. காரணமில்லாத நடமாட்டம் எதுவுமில்லை எனலாம்.

ஒருவர் சொல்லுகின்ற சொல்லை அல்லது செயலை வைத்துக் கொண்டு அவரைப் புரிந்து கொள்ள முடியாது. அதற்குப் பின்னால் உள்ள காரணத்தைத் தேடும் பொழுதே மற்றவரைப் புரிந்து கொள்ள முடியும்.

ஒருநாள் ஒரு வாலிபன் துவிச்சக்கர வண்டியில் வீதியால் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது நேரம் ஏறக்குறைய மாலை ஆறு மணியிருக்கும். அப்பொழுது அவன் ஒரு காட்சியைக் கண்டு விட்டுப் புதுமையடைந்தவனாக அப்படியே வீதியோரத்தில் நின்று விட்டான். அந்த வீதிக்கருகிலிருந்த குளத்தில் அவனது நண்பன் வழக்கத்திற்கு மாறாக இருகைகளையும் உயர்த்திக் கொண்டு சத்தம் போட்டவாறு தண்ணீரில் நடந்து சென்றான். நண்பனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? என்று கவலையோடு சிந்தித்த வண்ணம் நின்றான். அப்பொழுது உடனே அங்கே வேறொரு காட்சியையும் கண்டான். அவன் கைகளை உயர்த்திய வண்ணம் கத்திக் கொண்டு செல்லும் போது அவன் பின்னால் சில தாராக்கள் செல்வதைக் கண்டான். உண்மை என்னவென்றால் அந்த நண்பன் தாரா சிலவற்றை வீட்டில் வளர்த்து வந்தான். காலையில் அவற்றைத் திறந்து விட்டால் மாலையானதும் அவர் சென்று இரு கைகளையும் உயர்த்திச் சத்தம் போட்டுக் கொண்டு சென்றால் பின்னாலே தாராக்கள் ஓடி, கூட்டை அடையும்.

இங்கே வீதியால் சென்றவன் கண்ட காட்சி உண்மையானது. நண்பன் இரு கைகளையும் உயர்த்தியவாறு தண்ணீரில் நடந்து சென்றதும் உண்மை. ஆனால் அவன் பின்னாலே வந்த தாராக்களை இந்நிகழ்ச்சியோடு தொடர்பு படுத்தவில்லையேல் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்ற முடிவுக்கே வர வேண்டும்.

இதேபோன்று எமது வாழ்வில், குடும்பத்தில், அயலில் காரியாலயத்தில் மற்றவர்களைத் தீர்ப்பிடுகின்றோமல்லவா? அவர் அப்படிச் சொல்ல செய்ய என்ன காரணம் என்பதைத் தேடிப் பார்க்கிறோமே? இப்படி அவசரப்பட்டுத் தீர்ப்பிடுவதால் எமது வாழ்வில் உறவுகள் முறிந்து கவலைப்படுகின்றோமா? நிம்மதியை இழந்து தவிக்கின்றோமா?

எமது உணர்வுகள் அடிக்கடி மாறக் கூடியன. கோபம், கவலை, பயம், பொறாமை, வேதனை, பசி, எரிச்சல் இப்படிப்பட்ட உணர்வுகள் எம்மில் மாறி மாறிச் செயல்படுவதால் எமது நடமாட்டங்களும் அடிக்கடி மாறுகின்றன. ஆகவே ஒருவர் ஒன்றைச் சொல்லும் போது, செய்யும் போது எப்படிப்பட்ட உணர்வு அச்செயலுக்குப் பின்னணியில் இருக்கின்றது என்பதை அறிந்தாலே அவரைப் புரிந்து கொள்ள முடியும். காலையில் மகிழ்ச்சியோடு வேலைக்குச் செல்கின்ற கணவன், மாலையில் கவலையோடு வருகிறான். இதைக் கண்ட மனைவி காலையில் சந்தோசத்தோடு சென்றாரே மாலையில் கவலையோடு வருகிறாரே என்பதைத் தேடிப் பார்க்காது மனைவியும் கோபத்தோடு கணவனுடன் நடந்து கொண்டால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவாது.

ஒருவர் ஒருவரைப் புரிந்து கொள்ளுமளவுக்கே நாம் நல்ல உறவை ஏற்படுத்தப் பழகுகிறோம். எம்மைப் புரிந்து கொள்ளக் கூடியவர்களுடனே நாமும் நன்றாகப் பழக விரும்புகின்றோம். ஒருவரை முற்றாகப் புரிந்து கொள்ள எம்மால் முடிவதில்லை. ஆகவே மற்றவர்களைத் தீர்ப்பிடாது இருக்க முயலுவோம்.

### தீர்ப்பிடாதிருக்க சில ஆலோசனைகள்,

1. ஒருவர் மற்றவரைப் பற்றி எம்மிடம் வந்து சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது நன்று.
2.மற்றவர் சொல்வது உண்மையாகத் தான் இருக்க வேண்டும் என்று நினைத்தாலும் தீர்ப்பிடாதிருப்பது நன்று.
3.ஒருவர் மற்றவரைப் பற்றி வந்து எதையாவது சொல்லும் போது அவர் தனிப்பட்ட விதத்தில் தனக்கிருக்கும் பிரச்சினையை முன்கொண்டு அப்படிச் சொல்வதால் தீர்ப்பிடாதிருப்பது நன்று.
4. ஒருவர் தான் செய்த தவறை நினைத்து மனம் வருந்தி மனம் திருந்துகிறாரா? இல்லையா? என்பதை எல்லாம் முழுமையாக அறிய முடியாதிருப்பதால் அவரைத் தீர்ப்பிடாதிருப்பது நன்று.
5. ஸ்திரமாக அறிந்த விடயமானாலும் இரு பக்கங்களையும் தேடிப் பார்க்காது தீர்ப்பிடுவது பிழையல்லவா?
6.கண்களால் காண்பதைக் கொண்டு தீர்ப்பிடுவதும் நல்லதல்ல.
7. நீங்கள் இருக்கும் நிலையில் இருந்தவாறு திர்ப்பிடுவதும் உகந்ததல்ல.

இவைகளை மனதிற்கொண்டு இன்றைய நாளிலிருந்து தீரப்பிடாது வாழ ஆனைப்படுவோம். நாள்தோறும் இதைப் பயிற்சி செய்வோம். மகிழ்ச்சியாக மற்றவருடன் நல்ல உறவை ஏற்படுத்தி வாழ்வோம்.

**தொடரும்.........**

**நன்றி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்செய்தி மீள் அறிவிப்பு ஆண்டு - 2020

## மறைமாவட்டச் செயற்பாடுகள்

திருகோணமலை மறைமாவட்டத்தில் நற்செய்தி மீள்அறிவிப்பு ஆண்டை முன்னிட்டு பின்வரும் விசேட செயற்பாடுகளை செயற்படுத்த வேண்டுமென முடிவெடுக்கப்பட்டுள்ளது. இச் செயற்பாடுகளை அருட்பணி X. I. றஜீவ அவர்கள் பொறுப்பேற்று செயற்படுத்துவார். அந்த வகையில் முக்கியமாக கருத்திற் கொள்ளப்படும் விடயங்களாவன,

- ❖ செபவாழ்வு
- ❖ வேதாகமம்
- ❖ திருவருட்சாதனம்
- ❖ மறைக்கல்வி
- ❖ புனிதர்களின் வாழ்வு
- ❖ அடிப்படை விசுவாசம்
- ❖ வரலாறு- மறைமாவட்ம்/திருமலைதீபம்

தகவல் : இயக்குனர்,
திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள்,
திருகோணமலை மறைமாவட்டம்

## பொதுச் செயற்பாடுகள்
## மறைமாவட்டம் / மறைக்கோட்டம்

01 வளர்ந்தோர் அஞ்சல் மறைக்கல்வி.
02 விசுவாச/செப அட்டை அறிமுகம்.
03 திருமலைத்தீபம் - பத்திரிகை மூலமாக மறைமவட்ட பங்குசார்ந்த வரலாற்றுப் பதிவுகள்.
04 தேசிய குடும்ப ஞானஒடுக்கத்திற்குப்பால் மறைக்கோட்ட ரீதியான குடும்ப ஞானவொடுக்க ஆயத்தங்கள்.
05 திருவருட்சாதன செயல் அமர்வுகள்.
06 விசேட மறைக்கல்வி செயல் அமர்வுகள். மறையாசிரியர்களுக்கும், மறைக்கல்வி மாணவர்களுக்கும்.
07 புனிதர்களின் வாழ்வை உள்ளடக்கிய நாடக / கண்காட்சி போட்டிகள்.
08 மறைமாட்ட மறைக்கல்வி மாணவர்களுக்கு மறைக்கல்வியின் போது புனிர்களின் வாழ்வைப்பற்றிய போதனைகளை ஊக்குவித்தல்.
09 2020 - புனிதர்களை உள்ளடக்கிய அட்டை வெளியிடுதல்.
10 பங்குத்தந்தையின் வீடு தரிசிப்பு.
11 புனிதர்களைப்பற்றியும் அவர்களின் விசுவாச வாழ்வை கற்றுக்கொடுக்கும் செயல் அமர்வு.
12 அன்பிய ஊக்குவிப்பாளர்கள், ஒருங்கிணைப்பாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்.
13 பங்கு மேய்ப்புப்பணிச்சபை, சகல பக்தி சபைகள் அங்கத்தவர்களுக்கான செயல் அமர்வு.
14 செபிக்கும் குடும்பங்களை துறவரத்தோடு இணைந்து உருவாக்குதல்.
15 மறைமாவட்ட தொடர்புச்சாதனங்கள், பத்திரிகை, அலை ஓசை, அரச கத்தோலிக்க தொடர்பு சாதனங்களை இதற்காக பாவித்தல்

# புனிதராக மறைதூதராகிடுவோம்!
## இயேசுவுக்காய் வாழ்ந்த புனிதர்களிடமிருந்து நாமும் கற்றுக் கொள்வோம்

## இம் மாதத்திற்குரிய புனிதர்
## புனித ஜான் பொஸ்கோ



பிறப்பு : 16. 08. 1815
இறப்பு : 31.01. 1888 (72 அகவை)
சமயம் : கத்தோலிக்கத் திருஅவை, அங்கிலிக்க ஒன்றியம்
அருளாளர் பட்டம் : 01. 04. 1934 திருத்தந்தை பதினொராம் பயஸ் (உரோமை)
திருவிழா : 31 ஜனவரி
பாதுகாவல் : கிறிஸ்தவர்கள், வேலை பழகுபவர்கள், பதிப்பாசிரியர்கள், பதிப்பாளர்கள், பள்ளிச் சிறார்கள், இளையோர், கண்கட்டி வித்தை புரிவோர்.

புனித ஜோன் பொஸ்கோ இத்தாலியில் கஸ்டல் நூவோ எனும் நகரில் ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பிரான்செஸ்கோ பொஸ்கோ, மார்கிரட் ஓச்சீனா ஆகியோருக்கு இளைய மகனாகப் பிறந்தார். இவரது பெற்றோர் சிறுவயதிலேயே ஒழுக்கத்தையும் ஆன்மீகத்தையும் இவர்பால் விதைத்தனர்.

இவர் தனது 9வது வயதில் கண்ட கனவால் உந்தப்பட்டு ஒரு குருவாக வர வேண்டுமென முடிவெடுத்தார். சிறையில், சிறுசிறு தவறுகளுக்காக தண்டனை அனுபவிப்பவர்களுக்காக மனமுருகி அவர்களுக்கு நல்ல நண்பர்கள் இன்மையே இதற்கு காரணம் என்று மனம் வெதும்பினார். அவர்களுக்கு உணவு, தங்குமிட வசதி, செய்து கொடுத்தார். அதுமட்டுமன்றி கைத்தொழிலும் கற்றுக் கொடுத்தார்.

இவர் பல துறவற சபைகளை ஆரம்பித்தார்.
- சலேசிய சபை - ஆண்களுக்கான துறவற சபை
- கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியர் - பெண்களுக்கான துறவற சபை
- சலேசிய உடன் உழைப்பாளர் சபை - பொதுநிலையினருக்கான துறவற சபை

இம்மூன்று சபைகளும் ஏழைகளுக்குப் பணிபுரிவதையே நோக்கமாகக் கொண்டு காணப்படுகின்றது.

இவர் நிறுவிய சபைகள் உலகம் முழுவதும் பரவி பல நாடுகளிலும் சுமார் 2000இற்கும் மேலான விடுதிகள், அனாதை இல்லங்கள், பாடசாலைகள், விளையாட்டுக் குழுக்கள், சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு மையங்கள், விளையாட்டுப் பயிற்சி மையங்கள் இச்சபையினரால் ஏழைகளுக்கு என நடத்தப்பட்டு வருகின்றன.

புனித யோன் பொஸ்கோவின் திருப்பண்டமான அவரது வலது கரம் ஒரு திருப்பயணமாக உலகை சுற்றி வந்தது. 2011.11.19அம் நாள் இலங்கைக்கும் வந்தது. 1988இல் இவரது இறப்பின் நூற்றாண்டு நிகழ்வின் போது திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல், ஜான் பொஸ்கோவை இளைஞர்களின் தந்தை, ஆசிரியர் மற்றும் நண்பர் எனப் பிரகடனம் செய்தார். இவருக்கு திருத்தந்தை பதினொராம் பயஸ் 1934ல் புனிதர் பட்டம் அளித்தார்.

**இலங்கையில் ஜான் பொஸ்கோ அமைப்புக்கள்**

01. 1934ம் ஆண்டு ஹட்டன் நகரில் புனித ஜான் பொஸ்கோ ஆண்கள் கல்லூரி அமைக்கப்பட்டது.

02. தொழில்நுட்பக் கல்லூரிகள்
- மன்னார் மறைமாவட்டம் முருங்கனில்
- அனுராதபுர மறைமாவட்டம் நொச்சியாகமையில்
- கொழும்பு மறைமாவட்டம் ஒஸ்வெட்ட கெயாவ
- காலி மறைமாவட்டம் (தென்பகுதியில்)
- யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் அமைப்பு நிறுவுவதற்கான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

*- ஊக்குனர், திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள், முதூர்*

## இறந்தும் உடல் அழியாப் புனிதர்களின் பட்டியலில்.........
## புனித மரிய கொரற்றி



பிறப்பு : 1890, ஐப்பசி 16
தாய் : அசுன்ட்டா நீ கர்லினி
தந்தை : லூய்கி கொரற்றி
இறப்பு : 1902, ஆடி 06 (11 வயது)
புனிதர் பட்டம்: 1950.06.24 (திருத்தந்தை 12ம் பயஸ்)
பாதுகாவல் : வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள், இளம் பெண்கள்

- ■ கல்வி கற்குமளவிற்று வசதியில்லாத ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்.
- ■ ஏழு குழந்தைகளில் 3வது குழந்தையாகப் பிறந்தார் மரியா.
- ■ மரியாவுக்கு 9 வயதாகும் போது அவரது தந்தை மலேரியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறந்தார்.
- ■ 11வது வயதில் மரியா முதல்நன்மையைப் பெற்றார்.
- ■ நன்மை பெற்று 05 வாரங்களின் பின் ஒருநாள் மரியா தனிமையில் வீட்டில் இருந்தார். அந்நேரம் அவர்களது வீட்டில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 18 வயது இளைஞன் "அலெக்சான்ரோ" என்பவர் வீட்டினுள் நுழைந்தான்.
- ■ மரியாவை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவதே அவனது நோக்கமாக இருந்தது. ஆனால் மரியா இதற்கு உடன்படவில்லை. தன்னைக் கொன்றாலும் பரவாயில்லை. தன் மானம் காக்க வேண்டுமென்ற நோக்குடன் செயற்பட்டாள். இதனால் கோவமடைந்த அலெக்சான்ரோ மரியாவின் உடலில் 14 முறை கத்தியால் குத்தினான்.
- ■ இரத்த வெள்ளத்தில் பூத்த மரியா 24 மணிநேரத்தின் பின் உயிரிழந்தாள். "மன்னித்து விட்டேன் அவரை......" என்று கூறியபடியே உயிர்விட்டாள்.
- ■ அலெக்சான்ரோவுக்கு 30 வருட சிறைத் தண்டனை கிடைக்கப் பெற்றது. மனமாற்றமே அடையாத அவன், "மரியா தன் கைகளில் வெள்ளை நிறப் பூக்களைத் தருவதாகக் கனவு கண்டான்." அன்றே அவன் மனமாற்றம் பெற்று 27 வருடங்களின் பின் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டான்.
- ■ அலெக்சான்ரோ தன் இறுதி நாட்களில் கப்புச்சின் 3ம் சபைத் துறவியாக வாழ்ந்து இறந்தார். (1970)
- ■ புனித மரிய கொரற்றி இறந்து 45 ஆண்டுகளின் பின் திருத்தந்தை 12ம் பயஸ் அவர்களினால் புனிதராக உயர்த்தப்பட்டார்.
- ■ இவர் கத்தோலிக்கத் திருஅவையின் இளைய மறைசாட்சியும் உடல் அழியாமல் காணப்படும் புனிதையும் ஆவார்.

*- ஊக்குனர்கள், திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள்*
*பள்ளத்தோட்டம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்?...

அருட்பணி அ.அ. நவரெத்தினம்
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.



**முன்னுரை**

ஒரு ஞாயிறு திருப்பலியின் நிறைவில் என்னைச் சந்தித்த ஒருவர் "தற்போது புதிதாக நாம் சொல்கின்ற பரலோக மந்திரத்தின் கடைசியில் "எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்" என்று சொல்கிறோம். ஆனால் பழைய பாரம்பரிய சொல்லப்பட்டு வந்த செபத்தில் "எங்களை சோதனையில் விழ விடாதேயும்" என்று சொன்னோம். கடவுள் எவ்வாறு எம்மை சோதனைக்கு உட்படுத்த முடியும்? எனவே புதிய செபம் சரியானதல்ல, பழையதுதான் சரியானது" என்று கூறியதுடன் இதற்கு சரியான விடை யாது என்கின்ற கேள்வியினையும் என்னை நோக்கி எழுப்பினார். சிறிது நாட்களின் பிற்பாடு இக்கேள்வியானது குருக்களின் மாதாந்தத் தியானக் கூட்டத்திலும் எழுந்தது. "புதிய மொழிபெயர்ப்பு செபம் சரிவராது இதனை மாற்றி மீண்டும் பழைய முறையிலான பரலோக மந்திர செபத்திற்கு செல்ல வேண்டும்" என்கிற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இயேசு கற்பித்த இறைவேண்டல் செபமானது உலகுவாழ் அனைத்து கிறிஸ்தவர்களாலும், அவர்கள் எத்தகைய கிறிஸ்தவ சபைகளைச் சார்ந்திருந்தாலும் செபிக்கப்படுகின்ற ஓர் இறைவேண்டலாகும். அதுமட்டுமல்லாது மனதிற்கு இதமான பிடித்த செபமுமாகும். எனவே இக்கேள்விக்கு விடையளிக்க வேண்டிய தேவையுள்ளது என்று கருதியதன் விளைவாக இதுகுறித்து வெளிவந்த பல்வேறுபட்ட ஆய்வுகளைப் (விவிலிய) படித்தேன். படித்ததன் விளைவாக எழுந்ததே இச்சுருக்கக் கட்டுரையாகும். இதன் விரிவாக்க ஆய்வுக்கட்டுரையினை விரைவில் செய்து முடிக்கலாமென எண்ணியுள்ளேன்.

**இரண்டாம் வத்திக்கான் பேரவையும் திருவழிபாட்டுச் சீர்திருத்தமும்**

இரண்டாம் வத்திக்கான் பேரவையின் இதயமே இறைமக்களின் அருள்பணி நலன்தான். இதனைக் கருத்தில் கொண்டுதான் திருவழிபாடும் அமைய வேண்டும் என்பது இப்பேரவையின் பேராவலாகும். எனவே திருவழிபாட்டில் இறைமக்களின் முழுமையான, பொருளுள்ள, செயல்முறையிலான (காண்க திருவழிபாடு எண் 14) பங்கேற்பை உற்சாகப்படுத்துகின்ற விதத்தில் ஆயர்களும், அவர்களின் உடனுழைப்பாளர்களும் பெரிதும் கவனத்தில் கொண்டு பணிபுரிய வேண்டும் என்று திருஅவை மேலும் வலியுறுத்துகின்றது. இதன் விருப்பமும் இலக்கும் அதுதான். இதன் அடிப்படையில் வெளிவந்ததுதான் புதிய உரோமைத் திருப்பலி நூலின் மொழிபெயர்ப்பு. இதனை மறைந்த திருத்தந்தை 2ஆம் யோன் பவுல் 2002ஆம் ஆண்டில் வெளியிட்டு, தல அவைகளின் தாய்மொழிகளில் மொழிபெயர்க்கும் ஆணையும் பிறப்பித்தார்.

Liturgiam Authenticam (2001) என்கிற திருஅவையின் ஆவணம் பிராந்தியங்கள் தோறும் மேற்கொள்ளப்படுகின்ற மொழிபெயர்ப்புக்களில் பின்வரும் பிரதான விடயங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றது: அதாவது, "இலத்தீன் மொழிக்கு ஒத்ததாகவும், சரியான இறையியல் கருத்துக்கள் கொண்டதாகவும், பொது வழிபாட்டிற்கு உகந்த நற்செய்திப் பறைசாற்றலாகவும் அமைய வேண்டும்" என்பதாகும். அதனடிப்படையில் தமிழக ஆயர் பேரவை, தமிழக திருஅவையிலுள்ள பல்வேறு துறைசார் வல்லுனர்களின் துணைகொண்டு புதிதாக மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட தமிழ்மொழி உரோமைத் திருப்பலி நூலினை முதலில் தமிழக ஆயர் பேரவைக்கு சமர்ப்பித்து, நவம்பர் 2014இல் அ:.து ஏற்றுக்கொள்ளப்பட்டு தொடர்ந்து இந்திய இலத்தீன் ஆயர் பேரவையால் பெப்ரவரி 7, 2015இல் ஒப்புதல் வழங்கப்பட்டு இறுதியில் மே 16, 2017இல் உரோமை திருத்தூது ஆட்சிப்பீடத்தின் ஒப்புதலை பெற்றுக்கொண்டது. அதனையே இன்று நாம் ஆலயங்களில் புதிய உரோமைத் திருப்பலி நூலாக பயன்படுத்துகின்றோம். இதிலே பல்வேறுபட்ட மாற்றங்களும், சேர்க்கைகளும், நீக்கல்களும் இடம்பெற்றுள்ளன. நாம் இப்போது, இங்கே கவனத்தில் கொள்வது இயேசு கற்பித்த "விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே......" என்கிற இறைவேண்டல் செபம் மாத்திரமே என்பது குறிப்பிடத்தக்கது.

**திருவிவிலிய புதிய பொது மொழிபெயர்ப்பு**

தற்போது நமது பாவனையிலுள்ள தமிழ் திருவிவிலியமானது பொது மொழிபெயர்ப்பு விவிலியமாகும். இவ்விவிலியமானது நவம்பர் 26, 1995இல் வெளியிடப்பட்டதாகும். இதன் சிறப்பு யாதெனில் விவிலியத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளின் மூலமொழிகளாகிய முறையே எபிரேயம் (அரமெயிக்) மற்றும் கிரேக்கம் ஆகிய மொழிகளிலிருந்து நேரடியாக தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டதாகும். அதுவரையில் பயன்படுத்தப்பட்ட விவிலியமானது விவிலியத்தின் முதல் மொழிபெயர்ப்பாகிய புனித ஜெரோமால் (ஏரோணிமுஸ்) மொழிபெயர்க்கப்பட்ட "வுல்கத்தா" (Vulgate) என்று அழைக்கப்படுகின்ற இலத்தீன் மொழி விவிலியத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும். பொதுமொழிபெயர்ப்பு விவிலியத்தின் இன்னுமொரு சிறப்பு யாதெனில் மரபுவழி வருகின்ற கிறிஸ்தவ திருஅவைகளின் வல்லுனர்கள் இணைந்து இதனை வெளிக்கொணர்ந்தமையாகும்.

**இயேசு கற்பித்த இறைவேண்டல் - மத்தேயு 6:9-13, லூக்கா 11:2-4**

பொதுமொழிபெயர்ப்பிலும் சரி, அதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட விவிலியத்திலும் சரி இயேசு கற்பித்த இறைவேண்டலினை உற்றுநோக்குகின்றபோது நமது ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற வார்த்தையில் மாற்றம் கிடையாது. இரண்டிலுமே "எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்" என்கின்ற சொற்றொடர் எந்தவிதமான மாற்றங்களும் இன்றிக் காணப்படுகிறது

இயேசு கற்பித்த இறைவேண்டலானது மத்தேயு, லூக்கா ஆகிய இரண்டு நற்செய்திகளில் காணப்படுகிறது. மத்தேயு 6:9-13 பகுதியிலும், லூக்கா 11:2-4 பகுதியிலும் காணப்படுகிறது. மத்தேயு நற்செய்தியில் இயேசுவின் மலைப்பொழிவுப் போதனையில் வருகின்ற ஒரு பகுதியாகவும், லூக்கா நற்செய்தியில் இயேசுவின் எருசலேம் நோக்கிய பயணத்தில் வருகின்ற போதனையின் ஒரு பகுதியாகவும் அமைகின்றது.

"எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்" என்கிற சொற்றொடரானது மத்தேயு நற்செய்தியில் 6:13இலும், லூக்கா நற்செய்தியில் 11:4இலும் காணப்படுகிறது. ஆயினும் நமது மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட பரலோக மந்திர செபத்தில் "எங்களை சோதனையில் விழவிடாதேயும்" என்று செபிக்கிறோம். இப்போது கேள்வி நன்றாக புரிந்திருக்குமென எண்ணுகிறேன். எவ்வாறு அல்லும் பகலும் பாதுகாத்து வழிநடத்துகின்ற இறைவன் நம்மை சோதனையில் வீழ்த்த முடியும் அல்லது சோதனைக்கு உட்படுத்த முடியும்? அப்படியானால் நாம் இயேசு கற்பித்த இறைவேண்டல் செபத்தினை மீண்டும் நமது வழிபாட்டில், திருப்பலியில் மாற்றம் செய்ய வேண்டும் என்போரின் கருத்தினை ஏற்றுக்கொண்டு மாற்றம் செய்ய வேண்டுமா? அப்படி மாற்றம் செய்ய வேண்டுமென்கிற கருத்தினை ஆதரித்தால் விவிலியத்தில் உள்ள வார்த்தைகளை எவ்வாறு புரிந்து கொள்வது என்கிற சிக்கல் நிலை உருவாகிறது. அவ்வாறே நாம் தற்போது பயன்படுத்துகின்ற புதிய உரோமைத் திருப்பலி நூலும் கேள்விக்குள்ளாகின்றது.

**விவிலிய வல்லுனர்களின் பார்வை: மத். 6:12, லூக். 11:4**

இதனடிப்படையில் இக்கேள்விக்கு விடைகாண மத்தேயு 6:13 மற்றும் லூக்கா 11:4 குறித்த விவிலிய வல்லுனர்களின் கருத்து யாதென நோக்குவோம். அப்போது நாம் தெளிவினைக் பெற்றுக்கொள்ள முடியும். "விண்ணுலகிலிருக்க எங்கள் தந்தையே.." என்று ஆரம்பிக்கும் இயேசுவின் இறைவேண்டல் செபமானது ஏழு விண்ணப்பங்களை கொண்டதாகும். அதுகுறித்த விரிவான ஆய்வுக்கு இக்கட்டுரையில் நான் நுழையவில்லை. மாறாக ஆறாவது விண்ணப்பமாகிய "எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்" என்பதனைக் குறித்த விவிலிய வல்லுனர்களின் கருத்தினை நோக்கி விடை காண்போம்.

மான்சன் (T. W. Manson) என்கிற விவிலிய அறிஞர் திருவழிபாட்டில் பயன்படுத்தப்படுகின்ற இயேசுவின் கற்பித்த இறைவேண்டல் செபமானது மத்தேயு, லூக்கா மற்றும் திருத்தூதர்களின் படிப்பினைகள் 8:2 (Didache) என்பனவற்றின் தொகுப்பாகும் என்கிறார். இவரது கருத்தின்படி மத்தேயு 6:13 எவ்வாறு இறைவன் மனிதர்களை சோதனைக்கு உட்படுத்த முடியும் என்கிற குழப்ப மற்றும் மயக்கநிலையினை தோற்றுவித்துள்ளது. அத்தகைய குழப்பநிலை அங்கு வைக்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை πειρασμός – temptation – சோதனை வாயிலாக எழுவதாகும் என்கிறார். அத்தகைய குழப்ப நிலையினை தீர்த்துக்கொள்ள அவர் பரிந்துரைக்கும் தீர்வு யாதெனில் "கடவுள் ஒருவரை சோதனைக்கு உட்படுத்துவது என்பதனை நேர்மறையாக புரிந்துகொள்ள சீராக் 2:1 கூறுமாற்போல்: "குழந்தாய், ஆண்டவருக்கு பணிபுரிய நீ முன்வந்தால், சோதனைகளை எதிர்கொள்ள முன்னேற்பாடு செய்துகொள்" என்றுகூறி இறைவனின் சோதனை என்பது அவரது பணிக்கு நம்மை புடமிடுவதாகும்" என்கிறார். அதாவது அலகையின் சோதனை (tempt) எதிர்மறை மாறாக இறைவனின் சோதனை (test) நேர்மறையாகும்.

ஏர்ன்ஸ்ட் லொஹ்மேயர் (Ernst Lohmeyer) தமது “Our Father: An Introduction to the Lord’s prayer” எனும் நூலில் மத்தேயு நற்செய்தியாளரை மையப்படுத்தி விரிவாக இயேசு கற்பித்த செபத்தினை விளக்குகின்றார். இவரும் ஏனைய விவிலிய வல்லுனர்களைப்போன்று ‘எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்’ எனும் சொற்றொடர் சோதிக்கப்படுதல், புடமிடப்படுதல் என்கிற கருத்துப்பட ஏற்றுக் கொள்கிறார். அக்கருத்துக்கு வலுச்சேர்க்க திருத்தூதர் யாக்கோபு திருமுகம் 1:13இல் கூறப்பட்டுள்ள வார்த்தையினை மேற்கோள் காட்டுகின்றார். "சோதனை வரும்போது, "இச்சோதனை கடவுளிடமிருந்து வருகிறது" என்று யாரும் சொல்லக்கூடாது. ஏனெனில் கடவுள் தீமையின் தூண்டுதலுக்கு உள்ளாவதில்லை. அவரும் எவரையும் சோதிப்பதில்லை." அதாவது கடவுள், நம்மைச் சோதிப்பதில்லை மாறாக நம்மை பொன்னைப் நெருப்பில் புடமிடுவதுபோல புடமிடுகிறார். அப்படியென்றால் சோதனையினை கொண்டுவருவது யார் என்கிற அடுத்த கேள்வியினை லொஹ்மேயர் நம்முன்னே வைக்கின்றார். அதற்கு அவர் விடை பகர்கையில் அதனை தமது நிறைவுகாலப் (eschatological) பார்வையினூடாக விளக்குகின்றார். அவரது கருத்துப்படி "நிறைவு காலப் பெரும் சோதனை வருகின்றது. அது மனிதர்களுடைய தீராத ஆசையினாலும், சாத்தானின் செயல்களாலும் வருகிறது" என்று சொல்லி திருவெளிப்பாடு 3:10னை மேற்கோள் காட்டுகிறார்."மனவுறுதி தரும் என் வாக்கை நீ கடைப்பிடித்தால், மண்ணுலகில் வாழ்வோரைச் சோதிக்க உலகு அனைத்தின்மீதும் வரவிருக்கும் சோதனைக் காலத்தில் நான் உன்னைக் காப்பாற்றுவேன்." எனவே கடவுள் நம்மையில் சோதனையில் புடமிடுகிறார் என்கிறார்.

நன்றி - தொடரும்........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யோவான் நற்செய்தி அதிகாரம் 01- 03 வரை (முன்னுரை உட்பட)

➢ விடைகளை இந்த இதழிலேயே எழுதி அனுப்பவும்
➢ போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
➢ எல்லாரும் பங்குபற்றலாம்
➢ மிகச் சரியாக விடையளிப்பவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் (1ம்,2ம்,3ம் பரிசுகள்)
➢ எல்லாரும் மிகச் சரியாக பதில் அளித்தால் குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்கப்படும்
➢ பரிசில்கள் முறையே:
1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

01. நான்காம் நற்செய்தியின் ஆசிரியர் யாரென பழைய மரபுகள் கூறுகின்றன?

02. அருளும் உண்மையும் யார் மூலம் வெளிப்பட்டதாகவும் மற்றும் திருச்சட்டம் யார் வழியாக கொடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது?

03. சீமோனைக் கண்ட இயேசு அவரைப் பார்த்து என்ன கூறினார்?

04. யோவான் நற்செய்தியானது எழுதப் பெற்றமைக்கான முக்கிய நோக்கம் யாது?

05. இயேசு எருசலேம் ஆலயத்தை தூய்மையாக்குவதைக் கண்டு அவருடைய சீடர்கள் எவற்றை நினைவு கூர்ந்தனர்?

06. இயேசு கலிலேயாவிற்கு செல்லவிருந்த போது பிலிப்பைக் கண்டு என்ன கூறினார்?

07. ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன். இது யாரால், யாருக்கு கூறப்பட்டது?

08. யோவான் நற்செய்தியானது எத்தனையாம் ஆண்டு, எந்த மொழியில், எந்நகரில் எழுதப்பட்டது?

09. "மெசியா" என்பதன் பொருள் யாது?

10. யோவானின் வருகையைப் பற்றி முன்னறிவித்த இறைவாக்கினர் யார்?

11. நத்தனியேல் இயேசுவிடம் வருவதைக் கண்டு இயேசு கூறியது?

12. இயேசு செய்த முதல் அரும்அடையாளம் என்ன? இது எங்கே நடைபெற்றது?

13. விண்ணகத்திலிருந்து இறங்கி வந்துள்ள ..........................தவிர வேறு எவரும் .......................... ஏறிச் சென்றதில்லை.

14. "கேபா" என்பதன் பொருள் யாது?

15. எருசலேமிலுள்ள யூதர்கள் யோவானைப் பற்றி அறிந்து கொள்ள யாரை அவரிடம் அனுப்பி வைத்தனர்?

பெயர் : ..........................
பங்கு : ..........................
முகவரி: ..........................

முடிவுத்திகதி : 15.03.2020

## புதுவருட எதிர்பார்ப்பு

அருட்பணி. N.C. அருள்வரதன்

**இதோ கவிதை வரிகள் ...........**
சரியாக வடிவமையுங்கள்

❖ புதுப்பொலிவே வேண்டுமிங்கு
❖ புதிய ஆண்டு பிறந்துள்ளது
❖ பேதங்கள் குரோதங்கள் வேறுபாடுகள்
❖ உறவுகள் வளரத்துணை புரியாதே
❖ எல்லோரும் இதனை உணர்ந்து கொண்டே
❖ ஆட்சியை ஏற்றிருப்போரும்
❖ அன்பினால் ஒன்றிணைந்து வழிகாட்டவே
❖ நாட்டின் உயர்வினை அனைவரும் உணர்வோமே
❖ உணர்வோம் இதனை உணர்ந்து கொண்டே
❖ செயலாற்ற அனைவரும் முன்வருவோமே.

இப்போது கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்
எல்லாரும் சரியாக வடிவமைத்தால்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-
**முடிவுத்திகதி 15.03.2020**

## சிரிக்க சிந்திக்க.......

நீ ஊனமில்லாமல் பிறந்தாலே
அது இந்த பூமியில் நீ சாதிக்க
இறைவன் உனக்குக் கொடுத்த
சந்தர்ப்பம் தான். அதை நீ
சரியாகப் பயன்படுத்துவதும்
பாழ்படுத்துவதும் உன்
கையிலே




யாரை நீ வெறுத்தாலும்
உன்னை மட்டுமாவது
நேசிக்கக் கற்றுக்கொள்
ஏனெனில் இந்த உலகிலே
மிக மிக சிறந்த காதல்
உன்னை நீ நேசிப்பது
தான்....

**நோயாளி** : என்னது ஒவ்வொரு நாளும் ஒரு பச்சை முட்ட சாப்பிடனுமா?? என்னால முடியாது
**டாக்கடர்**: ஏன் முடியாது?
**நோயாளி** : ஏன்னா எங்க கோழி எந்த நாளும் வெள்ள முட்ட தான் போடும்....!!!!

உன் தோல்விக்கான
சரியான காரணத்தைத்
தேடுவதை விடுத்து
உனது வெற்றிக்கு
தேவையான
காரணிகளை கண்டறி
நீ வாழ்வினை
வெல்வாய்



பஸ் கண்டக்கடருக்கு வாழ்க்கப்பட்டது தப்பா போச்சிடி
ஏன்டி ???
வீட்டு வாசல் படியில் நிக்க விடுறார் இல்லடி எப்ப பாத்தாலும் மேல ஏறு மேல ஏறுனு சொல்லிட்டே இருக்கார்..



பெண் : ஹலோ இது கஸ்டமர் கெயார் தானே
கஸ்டமர் கெயார்: ஆமாம் மேடம், உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?
பெண் : என் அஞ்சு வயசு பையன் சிம் கார்டை விழுங்கி விட்டான்.
கஸ்டமர் கெயார்: அதற்கென்ன டாக்டர்கிட்ட கூட்டிட்டு போங்க மேடம்.
பெண்: அதில்ல சார், அந்த சிம்ல 95 ரூபா பலன்ஸ் இருந்திச்சி. இப்ப என் பையன் பேசும் போது காசு போகுமா சார்!!!??????



கடவுள் : மனிதா! உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்
மனிதன் : இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ரோடு போட்டுக் கொடு சாமி
கடவுள் : அது கஷ்டமாச்சே. கடல்ல எப்பிடிப்பா ரோடு போடுறது? வேறு கேள்
மனிதன் : அப்ப, என் மனைவி பேச்ச குறைக்கனும், நான் சொல்றத தான் கேட்கனும், எதிர்த்துப் பேசக் கூடாது....!!!!! அப்பிடி செய்ங்க சாமி.....!!!!
கடவுள்: அமெரிக்காவிற்கு ரோடு சிங்கிளா...? டபுளா???

**இணையம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 34
## 01தெசலோ அதி 01-05 வரை முடிவுகள்

போட்டியில் கலந்து கொண்டோர் - 29 பேர்
சரியாக விடையளித்தோர் - 23 பேர்



### பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு ரூபா 500/-
அ. நியோலின்
குவாடலூப்பே திருத்தலம்

2ம் பரிசு ரூபா 300/-
ஜோ. அருஷியா
அன்புவழிபுரம்

3ம் பரிசு ரூபா 200/-
தசாயினி
இருதயபுரம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெ | ரு | ம | கி | ழ் | ச் | சி | | | மீ |
| க | ரா | வா | கு | க் | யா | மை | ய் | தூ | ட் |
| இ | றை | வா | ர் | த் | தை | யை | | ம் | பு |
| றை | | | த | ள | ர் | ந் | து | ள | அ |
| வ | ன் | ட | மு | வ | ர் | ஆ | | கா | டை |
| னி | | இ | டை | வி | டா | து | | க் | ய |
| ட | | | கி | க் | நோ | ர் | தி | எ | வே |
| ம் | தி | ரு | த் | தூ | த | ர் | க | ள் | |
| | உ | யி | ர் | த் | தெ | ழு | ந் | தா | ர் |
| | ம் | டு | வோ | ளி | தெ | த் | வு | றி | அ |

01. இறைவனிடம்
02. இறைவார்த்தையை
03. திருத்தூதர்கள்
04. இடைவிடாது
05. எதிர்நோக்கி
06. தளர்ந்து
07. பெருமகிழ்ச்சி
08. ஆர்வமுடன்
09. உயிர்த்தெழுந்தார்
10. எக்காளம்
11. அறிவுத்தெளிவோடும்
12. மீட்பு அடையவே
13. தூய்மையாக்குவாராக

### பாராட்டுக்குரியவர்கள்

01. M.S. தனராஜா - அன்புவழிபுரம்
02. கிருஷாலினி - பாலையூற்று
03. M. டிவான் ஜரமி - உவர்மலை
04. யே. டிவேஞ்சன் - அன்புவழிபுரம்
05. I. அல்போன்ஸ் - இருதயபுரம்
06. அ. கிரிசாளினி - இருதயபுரம்
07. வி. வனஜா - இலிங்கநகர்
08. கயானி - அன்புவழிபுரம்
09.ஸ்ரெலா - சாம்பல்தீவு
10.றொவீனா - பேராலயம்
11.மேரி கொன்சி - நிலாவெளி
12.அனுஷ்யா - இருதயபுரம்
13. டெலிஷா நெவில்ராஜ் - குவாடலூப்பே
14. கவின் கிறிஸ் ஜஸ்வின் - நித்தியபுரி
15. லீனஸ் பியூரா - மூதூர்
16. நெ. டனிற் ஷெரோன் - குவாடலூப்பே
17. திரேசா ஜோன்சன - பேராலயம்
18. லொரன்சி றன்சியா - சாம்பல்தீவு
19. வலன்டினா - பாலையூற்று
20. கே. ஆகாஷ் - இலிங்கநகர்

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி



### நல்லாயன்

பங்குபற்றியவர்கள் : 16 சிறார்கள்

பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/- ரூபா
ஜே. யூலியஸ் லுவிஸ் ரெஜினோல்ட்
4ம் ஒழுங்கை, பெரியகுளம்,
சாம்பல்தீவு

2ம் பரிசு 300/- ரூபா
எம். யுவான் ஜெரமி
125/A, உட்துறைமுக வீதி,
உவர்மலை

3ம் பரிசு 200/- ரூபா
நியூட்டன் திமோசினா
76/A பேராலய வீதி,
திருகோணமலை

பங்குபற்றிய அனைவருக்கும்
பாராட்டுக்களும் நன்றிகளும்

## சிறுவர்களுக்கான போட்டி
## படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்
# சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்

01



02



- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறம் தீட்டி வித்தியாசங்களை கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
  1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=

பெயர் ..........................................................

முகவரி ..........................................................

பங்கு ..........................................................

தரம் ..........................................................

முடிவுத் திகதி 15.03.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மறைமாவட்ட திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் புதிய நிர்வாகத் தெரிவு

2020ம் ஆண்டிற்கான கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் 18.01.2020 அன்று இயக்குனர் தலைமையில் சிறப்பான முறையில் இடம்பெற்றது. அனைத்துப் பங்குகளில் இருந்தும் திருப்பாலர் சபை ஊக்குவிப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். கடந்த ஆண்டில் சிறப்பாக பணியாற்றிய நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதுடன் புதிய மறைமாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு, நற்செய்தி மீள் அறிவிப்பு ஆண்டிலே சிறப்பாக பணியாற்ற வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**தகவல் : திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள் செயலகம், திருகோணமலை மறைமாவட்டம்**

## தீபத்தின் ஒளியில்



நற்செய்தி மீள்அறிவிப்பு ஆண்டில் நம்மை, நாம் செல்லும் பாதையை மீட்டிப்பார்க்க திருமலை தீபம் பத்திரிகை தரும் புதிய வாய்ப்பு "*தீபத்தின் ஒளியில்*" என்னும் **உங்கள் கேள்விகளுக்கு எங்கள் பதில்கள்!**

விவிலியம், திருஅவை, வழிபாடு, திருச்சட்டம், எம் நம்பிக்கை, ஆகியவை தொடர்பில் உங்களுக்கு எழும் வினாக்களை எங்களுக்கு எழுதுங்கள்.

மாறிவரும் உலகில் பெருகிவரும் சந்தேகங்களை, கேள்விகளை அதிலும் இறைவன், சமயம், என்பன மட்டில் இன்னும் அடிமை மனநிலையோடு ஈடுபடாமல் விடுதலையின் மக்களாய் பங்கேற்க தீபத்தின் ஒளியில் என்னும் இப்பகுதி உங்களுக்கு உதவும்.

பணி. சூசைமுத்து டக்ளஸ் அவர்களோடு இணைந்து பல்வேறு துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றோர் விடையளிக்க காத்திருக்கிறார்கள்.

**உங்கள் கேள்விகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி,**
**தீபத்தின் ஒளியில்**
திருமலை தீபம்
திருமறைக்கல்வி நடுநிலையம்.
297, டொக்கியாட் வீதி, திருகோணமலை
e-mail – catetcota@gmail.com


## நமக்கென சுயநலமாக வாழ்ந்த காலம் போதும்



நமக்கென வாழ்ந்த காலம் போதும், இனிமேலாவது இறைவனுடனும் இறைவனுக்காகவும், மற்றவர்களுடனும், மற்றவர்களுக்காகவும், அன்புடனும் அன்பிற்காகவும் வாழ வேண்டிய காலமிது என அழைப்பு விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ். திருஅவையின் வரலாற்றில், இறைவார்த்தை ஞாயிறு, முதன்முறையாகச் சிறப்பிக்கப் பட்டதையொட்டி, வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவிலில், திருப்பலி நிறைவேற்றி, மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனந்திரும்பலுக்கு அழைப்புவிடுக்கும் இயேசுவின் படிப்பினைகளுக்கு நம் தினசரி வாழ்வில் இடமளிப்போம் என வலியுறுத்தினார். வாழ்வில் நாம் சந்திக்கும் பல்வேறு வார்த்தைகளில் நம் வாழ்வைப் பற்றி பேசும் இறைவார்த்தைக்குச் செவிமடுக்க, விவிலியத்தை, எப்போதும் நம் அருகிலேயே வைத்துக் கொள்வோம் என்ற அழைப்பையும் விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

**ஆதாரம் : வத்திக்கான் இணையம்**

## "ஆண்டுகளின் செல்வம்" வயது முதிர்ந்தோரைக் குறித்து கருத்தரங்கு




வயது முதிர்ந்தோரை மையப்படுத்தி , உரோம் நகரில், ஆண்டுகளின் செல்வம் என்ற தலைப்பில், நடைபெறும் கருத்தரங்கில் 60 நாடுகளைச் சேர்ந்த 550க்கும் மேற்பட்ட அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கின் முதல் பகுதியில், தூக்கியெறியும் கலாச்சாரமும் அதன் மாற்று அடையாளமாக திருஅவை வயதில் முதிர்ந்தோரை பேணும் பண்பும் விவாதிக்கப்பட்டது. கருத்தரங்கின் இரண்டாவது பகுதியில், வயதில் முதிர்ந்த தாத்தா பாட்டி என்ற தலைமுறையினருக்கு குடும்பங்கள் காட்ட வேண்டிய பொறுப்புக் குறித்தும் மூன்றாவது பகுதியில் வயதில் முதிர்ந்தோர் திருஅவைக்குப் பணியாற்ற பெற்றுள்ள அழைப்புக் குறித்தும் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றது.

**ஆதாரம் : வத்திக்கான் இணையம்**



## நோயாளி, எண் அல்ல, மனித சமுதாயத்தின் தேவையை எதிர்பார்க்கும் ஒரு மனிதர்

**- திருத்தந்தை**

இத்தாலியின் வில்லா மரியா மருத்துவ அமைப்பை சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நோயாளி, எண் அல்ல அவர் மனித சமுதாயத்தின் தேவையை எதிர்பார்க்கும் ஒரு மனிதர் என்று கூறினார்.

பொருளாதார-நிதி சார்ந்த ஆதாயத்தை மட்டுமே நோக்காகக் கொண்டிருக்கும் அமைப்புமுறைகளில் அமுங்கிவிடாது, நோயாளிகளுக்கு எப்போதும் அருகிலிருக்கும் நடைமுறையைக் கைக்கொள்ளுமாறு அழைப்பு விடுத்த திருத்தந்தை, இதன் வழியாக, மருந்துகளும். மருத்துவமனைகளும், நலவாழ்வு மையங்களும், மனிதரை மையப்படுத்துவதாய் அமைந்திருக்கும் என்று கூறினார். கிறிஸ்தவ நலப் பணியாளர்கள் தங்கள் பணிகளை ஆற்றுகையில். 'மிகச்சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்' என்ற இயேசுவின் திருச் சொற்கள் உணர்வில் பணியாற்றுமாறு திருத்தந்தை கேட்டுக் கொண்டார்.

***ஆதாரம் – வத்திக்கான் இணையம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org